பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 23, புதன்கிழமை 08.03.2017 | கதிர் 123

இன்று மகளிர் தினம்




### சீறுகிறது ரெலோ

# தமிழ்க் கூட்டமைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சி தன்னிச்சை, சர்வாதிகாரம், தேசிய விரோதம்



★ சந்தர்ப்பவாதம் ★ அரசியல் பேரம் ★ திரை மறைவில் உடன்பாடு ★ ஒற்றுமைக்கு ஆப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தன்னிச்சையாகவும், சர்வாதிகாரமாகவும் செயற்படுகின்றது எனக் குற்றம்சுமத்தியுள்ளகூட்டமைப்பின்அங்கத்துவக் கட்சியான ரெலோ, இந்த அரசியல் செயற்பாடுகள் சந்தர்ப்பமாகவும், அரசியல்பேரம், திரைமறைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டு, கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனையும் காட்டமாகச் சாடியிருக்கின்றது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) செயலாளர் நாயகம் ந.ஸ்ரீகாந்தா நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்

பக்கம் 18 »

### சுமந்திரன் பதிலடி

# தலைவர் சம்பந்தனுக்கும் மறைத்துக் கடிதம் ஐ.நாவுக்கு அனுப்புவதுதானா ஐக்கியம்?



★ போலிக் கையெழுத்துடன் பொய் ஆவணம்! ★ ஒற்றுமையைக் குலைப்பவர்கள் யார்?

கொழும்பு, மார்ச் 08

தம்மீது 'ரெலோ' அமைப்பின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி தந்திருக்கின்றார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கும் கூட்டமைப்பின் சார்பில் சர்வதேச விடயங்களைக் கையாளும் எனக்கும் தெரியாமல், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் ஒளிவு மறைவாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கடிதம் அனுப்பியவர்கள் யார்? அது ஐக்கியத்தை-ஒற்றுமையை-வலுப்படுத்தும் செயலா?

அதுவும் கையொப்பம் இடாத - கையொப்பம் இடமாட்டோம் என்று

பக்கம் 18 »

### அரசமைப்பு வழிகாட்டல் குழுவில்

# அதிகாரப் பகிர்வு இன்று பேசி முடிவு!

கொழும்பு, மார்ச் 08

**நேற்றுக் கூடிய அரசமைப்பு வழிகாட்டல் குழு, சுமார் ஒரு மணி நேரம் அதிகாரப் பகிர்வு குறித்து விரிவாக ஆராய்ந்தது. அதன் கூட்டம் இன்று பிற்பகலிலும் தொடரும். தான் அரசமைப்புச் சபைக்குச் சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்கால அறிக்கையில் இடம்பெறவிருக்கின்ற அதிகாரப் பகிர்வு வடிவத்தை அரசமைப்பு வழிகாட்டல் குழு பெரும்பாலும் இன்று இறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் முக்கிய பிரமுகர் ஒருவர் இத்தகவலைக் 'காலைக்கதிர்' இதழுக்கு நேற்று மாலை தெரிவித்தார்.

தென் மாகாணங்களின் முதலமைச்சர்கள் மேற்படி அரசமைப்பு வழிகாட்டல் குழுவுக்குச் சமர்ப்பித்த அதிகாரப் பகிர்வு யோசனைகள் உட்பட பல தரப்புகளினாலும் முன் வைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வுக்கோரிக்கைகள்

பக்கம் 18 »

### வேலையற்ற பட்டதாரிகள் இன்று மனிதச் சங்கிலிப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் இன்று தாங்கள் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்எனஅறிவித்துள்ளனர். தங்களின் அந்தப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நியமனங்கள் வழங்குமாறு கோரி யாழ். மாவட்டச்செயலகத்திற்கு முன்பாக கடந்த ஒன்பது நாள்களாகப்போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். பத்தாவது நாளான இன்று போராட்ட வடிவத்தை மாற்றவுள்ளனர்.

தாம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மழை, வெயில் பாராது

பக்கம் 18 »




### விமானத்தை வீழ்த்தி 4 படையினரைக் கொன்ற

## ஏவுகணைத் தாக்குதல் வழக்கில் எதிரி யாழ். நீதிமன்றால் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ். குடாநாட்டின் கொம்படிப் பகுதியில் விமானப் படை விமானத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அதிகாரி ஒருவர் உட்பட 4 விமானப்படையினரைக் கொன்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் சிவசுப்பிரமணியம் தில்லைராஜ் என்ற எதிரியை

பக்கம் 18 »

## காணி மீளளிப்பை வலியுறுத்தி இன்று நாடாளுமன்றில் சம்பந்தன் பிரேரணை!



கொழும்பு, மார்ச் 08

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை அவர்களிடம் கையளிக்க வலியுறுத்தி இன்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விசேட பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

அந்தப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

தனியாருக்குச் சொந்தமான பாரியளவிலான காணிகள் மே 2009இல் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரும்

பக்கம் 18 »

# இந்திய மீனவர் மீதான சூடு; இலங்கை கடற்படை மறுப்பு

கொழும்பு, மார்ச் 08

இந்திய மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவத்துக்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்று இலங்கைக் கடற்படை பேச்சாளர், லெப்டினன்ட் கொமாண்டர் சமிந்த வலகுலுகே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் ராமேஸ்வர மாவட்டத்தின் தங்கச்சிமடம் பகுதியிலிருந்து கச்சதீவு அருகேவந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த சமயம், பிரிட்ஜோ என்ற மீனவர் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் சுடப்பட்ட நிலையில் இறந்துள்ளார்.

அவருடன் வந்த சரண் என அழைக்கப்படும் சரவணன் என்பவர் காயமடைந்துள்ளார் என்று இந்திய மீனவ திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் குளஞ்சிநாதன் இந்திய ஊடகங்களுக்கு செவ்வியளித்துள்ளார்.

இவர்களுடன் வந்திருந்த மேலும் சில மீனவர்கள் காயங்கள் எதுவும் இன்றி அதிகாலை 12.30 மணி அளவில் இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்று மீனவ சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அவ்வாறு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் பட்சத்தில் எச்சரிக்கை மாத்திரமே விடுக்கப்படும் எனவும் இலங்கைக் கடற்படையினர் யார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்றும் கடற்படைப் பேச்சாளர் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் வடக்கு கடற்பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சக்திவாய்ந்த வேகத்தாக்குதல் வள்ளம் மற்றும் வேகத்தாக்குதல் காவல்ரோந்து வள்ளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எந்தச் சந்தர்ப்பத்திலும் கடற்படை பாதுகாப்பு ரோந்துக்காக சிறிய வள்ளங்கள் பயன்படுத்தி ரோந்து மேற்கொள்வதில்லை.

இதேபோன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடற்படை தளபதியின் முழுமையான அனுமதியின்றி கடற்படை வள்ளங்களில் கடமையில் ஈடுபடும் நபர்கள் வேறு வள்ளங்களில் அல்லது நபர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் வள்ளங்களுக்கு இலங்கை கடற்பிரதேசங்களில் தேவையற்ற விதத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் ட்ரோளர் வள்ளங்களை கைப்பற்றுவதற்குத் தெளிவான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் போது கைது செய்யப்படுபவர்கள் மற்றும் கைப்பற்றப்படும் வள்ளங்களை சட்ட நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளிடம் ஒப்படைப்பது வழமையான நடைமுறை ஆகும். - என்று கடற்படையால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ

## பாதாள உலக குழுக்கள் இல்லாது ஒழிக்கப்படும்



பொலிஸ் மா அதிபர் பூஜித சூளுரை

வவுனியா, மார்ச் 08

இலங்கையில் செயற்படும் பாதாள உலக குழுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் விரைவில் இல்லாதொழிக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர சூளுரைத்துள்ளார்.

பாதாள உலக குழுவினரின் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு விசேட அதிரடிப் படையினர் பணிகளில் ஈடுபடுத்தப் படுவார்கள் என்று வவுனியாவில் வைத்து அவர் கூறியுள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் சமாதான விகாரையைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சட்டத்தின் அடிப்படையில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். குற்றவாளிகளைக் கைதுசெய்வதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் சட்டத்துக்கு உட்பட்டே மேற்கொள்ளப்படும்.

அனைத்து விதமான சட்டவிரோத நடவடிக்கைகளையும் களைவதற்குப் பொலிஸ் மற்றும் புலனாய்வு சேவைப் பிரிவினரின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும். அண்மையில் களுத்துறை பகுதியில் வைத்து சிறைச்சாலை வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு யாரையும் குறைகூற முடியாது.

இதற்கான பொறுப்பை ஒட்டுமொத்தமாக ஏற்க வேண்டும். சிறைச்சாலை அதிகாரிகளையோ, பொலிஸ் உத்தியோகத்தர்களையோ குற்றம்சாட்டுவது சரியல்ல.-என்றார். (ஐ)

## ஏகாதசி தீர்த்தமும் மாசி மகத் திருவிழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 08

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை ஏகாதசி தீர்த்தமும், எதிர்வரும் சனிக்கிழமை மாசி மகத் திருவிழாவும் நடைபெறும்.

காலை 8 மணிக்குச் சிறப்பு முழுக்கு ஆராதனைகளுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும். 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும். 10 மணிக்கு வசந்த மண்டப வழிபாடு நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (சு)

## மீன்பிடித்துறை அமைச்சர் விசாரணைக்கு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 08

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துமாறு மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்புச் செயலாளருக்கு எழுத்து மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒரு இந்திய மீனவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, இந்திய உயர்ஸ்தானிகருடனும் பேச்சு நடத்தியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படாது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக் கடற்படையினரே தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மீனவர் கொலை தொடர்பில் இலங்கை பிரதமரிடம் கேள்வி

### இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவிப்பு

தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் குறித்து, இலங்கை பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் பிரிட்ஜோ, இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வருத்தம் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது:-

இந்திய மீனவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் இந்தப் பிரச்சினையை இலங்கை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்று கேள்வி எழுப்பியுள்ளார். நடந்த சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி இரு நாட்டு மீனவர்களிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்குப் பின்னர் நடந்துள்ள முதல் துப்பாக்கிச் சூடு இது வாகும். - என்று கூறியது.

அத்துடன், இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படும் இந்தத் தாக்குதலுக்கு தமிழக மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் மற்றும் தமிழக அரசியல்வாதிகள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

## இலங்கைச் சொத்துக்களை விற்க ஆலோசனை:

# சர்வதேச நாணய நிதியத்தின் அருகதையற்ற செயற்பாடு!


இலங்கையின் பொதுச் சொத்துக்களை விற்பனை செய்யுமாறு கூறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்கு அருகதையில்லை என்று ஊழல் எதிர்ப்பு குரல் என்ற சிவில் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் காணப்படும் கடன் அளவுகளை குறைப்பதற்கு அல்லது நிர்வகிப்பதற்கு அரச சொத்துக்களை விற்பனை செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது என்று ஊடகங்களில் கடந்த வார இறுதியில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்பில் நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு குரல் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு :-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் இருந்த பொதுச்சொத்துக்களை விற்பனை செய்பவர்



ஊழல் எதிர்ப்பு குரல் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க விசனம்

களுடன் இணைந்து ரணில் மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு சொத்துக்களை விற்பனை செய்யும் விளையாட்டை ஆரம்பித்துள்ளது.

இது குறித்து சட்டரீதியான நடவடிக்கையை எடுப்பதற்கு நாங்கள் ஆயத்தமாகி வருகின்றோம். அதற்கான ஆவணங்களையும் தயார்ப்படுத்தி வருகின்றோம். ஊழல் எதிர்ப்பு குரல் என்ற வகையில் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். நம்நாட்டு சொத்துக்களை விற்பனை செய்யுமாறு சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கு கூற அருகதையில்லை. அதுபோன்று பொது மக்களின் பணத்தை சூறையாடி ஏப்பமிட்டவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரணை செய்யாமல் பின்வாங்க வேண்டாம். பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்நாட்டு மக்களின் சொத்துக்களை விற்பனை செய்யும் காரியத்தில் ஈடுபட வேண்டாம் என்று அரசுக்கு அறிவுரை கூறுகின்றோம். கடந்த ஆட்சி போன்று இந்த அரசிலும் விளையாட்டுக்களை ஆரம்பிக்க எத்தனிக்கின்றனர். இதற்கெதிராக நாங்கள் குரல் கொடுப்போம்.- என்றார். (ஐ)

# நிலத்தடி நீர் நிபுணர்கள் குழுவினர் யாரைப் பாதுகாக்க முயல்கின்றனர்?

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராயவில்லை. மாறாக, யாரையோ பாதுகாக்கும் வகையிலேயே அதன் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என வடமாகாண எதிர்க் கட்சித் தலைவர் எஸ். தவராசா குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

வடக்கு மாகாணத்தின் குடி தண்ணீர் மற்றும் நீர்வழங்கல் தொடர்பான சிறப்பு அமர்வு நேற்றுக் கைதடியிலுள்ள மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அதன் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பாக வடக்கு மாகாண விவசாயஅமைச்சினால்நியமிக்கப்பட்ட நிபுணர் குழு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் பல தவறுகள் காணப்படுகின்றன. அது பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அவ்வாறு ஒரு குழு அமைப்பதற்கு மாகாண விவசாய அமைச்சருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதிகாரமில்லாத விடயத்தில் அவர் ஏன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்? இது எமக்கு பல கேள்விகளை ஏற்படுத்துகின்றது. குழு அமைக்கப்பட்டு 3 மாதத்திலே அதன் முதலாவது அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில் btex இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், தண்ணீரில் ஒயில் உள்ளதா எனக் கண்டுபிடியுங்கள் என்றே அந்தக் குழுவிற்குக் கூறப்பட்டது. ஒயிலில் btex இருக்காது. பெற்றோலில்தான் அது இருக்கும். இவ்வாறு ஒயிலைக் கண்டுபிடிக்கக் கூறப்பட்டதற்கு btex இல்லை என முதலாவது அறிக்கையை வெளியிட்டனர். ஐந்து மாதங்கள் கடந்த பின்னர் ஏற்கனவே நீர்வழங்கால் வடிகாலமைப்புச் சபை வெளியிட்ட அறிக்கை தவறு என்று மற்றொரு அறிக்கை விட்டனர்.

ஒயில் உள்ளதா எனக் கண்டுபிடிக்க அமைக்கப்பட்ட குழுவினர் தயாரித்த அறிக்கையில், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அறிக்கை தவறு என்று தாங்கள் புதிய அறிக்கை விட்டனர்.

மேலும், மேற்படிக் குழுவினர் தயாரித்த அறிக்கையின் எந்த ஆவணக் குறிப்புக்களும் இல்லை. அந்த அறிக்கையில் அடிப்படைத் தரவுகள் பிழையாகத் திரிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமையில் நிலத்தடி நீரில் ஒயில் கலந்துள்ளமை தொடர்பாக ஆஸ்திரேலியாவில் இருப்பவர்கள் ஒரு அறிக்கை தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். அவர்கள் யாவர்?, அவர்களுக்கு யார் இந்த அதிகாரம் கொடுத்தது?

இலங்கை தர நிர்ணய சபை குடிநீரில் 0.2 மில்லி கிராம் அளவு கன ஒயில் இருக்கலாம் என நிர்ணயம் செய்துள்ளது. இதேவேளை மத்திய சுகாதார அமைச்சு 2 மில்லி கிராம் அளவு கன எண்ணெய் இருக்கலாம் என நிர்ணயம் செய்துள்ளது.

எனவே, மாகாண விவசாய அமைச்சினால்உருவாக்கப்பட்ட நிபுணர்குழு, குறைந்த அளவான 0.2 மில்லிகிராம் அளவை நிர்ணயமாக எடுக்காமல் சுகாதார அமைச்சின் அளவை நிர்ணயமாக எடுத்தது ஏன்?

மக்களுடைய நன்மைக்காகவே அனைவரும் செயற்பட வேண்டும். ஆனால், இந்த நிபுணர் குழு அறிக்கை மக்கள் நன்மைக்காக அல்லாமல் யாரையே காப்பாற்றுவதற்காகவே தயாரிக்கப்பட்டது போன்று உள்ளது. – எனத் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் – இரணைமடுக் குடி நீர்த் திட்டத்தை 2300 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்த இருந்த போதிலும் அதனை நிராகரித்த வடக்கு மாகாண சபை கடந்த மூன்று வருடங்களில் கொண்டு வந்த மாற்றுத் திட்டம் என்ன என்றும் ஏன் இதுவரை அவ்வாறானதொரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்கவில்லை எனவும் தவராசா கேள்வி எழுப்பினார். (ம)

# முதலமைச்சர் ஒத்திவைக்கக் கோரியும் ‘குடிதண்ணீர்’ சிறப்பு அமர்வு நடந்தது

### முடிவுகள் எவையுமின்றி கலைந்தது சபை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தின் குடி தண்ணீர் மற்றும் நீர்வழங்கல் தொடர்பான சிறப்பு அமர்வை ஒத்திவைக்குமாறு வடக்கு முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை நிராகரித்து நேற்று அமர்வு நடைபெற்ற போதிலும் எந்தவிதமான முடிவுகளும் எடுக்கப்படாமல் அது முடிவடைந்தது.

மக்கள் தண்ணீரைக் குடிக்கலாமா? குடிக்கக்கூடாதா? என்பது தொடர்பாக நேற்றைய சிறப்பு அமர்விலும் எந்த முடிவும் எடுக்கப்படாததால் மக்களின் சந்தேகத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை.

மேற்படி விடயம் தொடர்பாக சிறப்பு அமர்வு ஒன்றை நடத்துவது என மாகாண சபையின் கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தான் சுகவீனமுற்று இருப்பதாலும் வேறு சில காரணங்களாலும் அந்தச் சிறப்பு அமர்வை ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் அவைத்தலைவரிடம் கோரியிருந்தார்.

ஆனால், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், நேற்று சிறப்பு அமர்வை 7 ஆம் திகதி (நேற்று) நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த அமர்வையும் ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் அவைத்தலைவரிடம் கடந்த 28 ஆம் திகதி மின்னஞ்சல் மூலம் கோரியிருந்தார். இதில் அரசியல் உள்நோக்கத்துடன் வேறு பல காரணங்கள் இருக்கின்றன எனவும் அவர் அந்தக் கோரிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அவை நடவடிக்கைகள் குழு முதலமைச்சரின் கோரிக்கை தொடர்பில் பரிசீலித்தது. அந்தக் குழு சிறப்பு அமர்வை ஒத்திவைக்க முடியாது என எடுத்த தீர்மானம் தொடர்பாக முதலமைச்சருக்கு அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இன்று (நேற்று) சிறப்பு அமர்வு நடத்தப்படுகின்றது என அவைத் தலைவர் தெரிவித்தார்.

ஆனாலும், நேற்று அந்த அமர்வு ஆரம்பமானபோது, முதலமைச்சர் இன்றி அமர்வை நடத்தவேண்டாம். ஒத்திவையுங்கள் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் அவைத் தலைவரைக் கேட்டுக்கொண்டனர். அதே நேரம், இனியும் அதை ஒத்திவைக்க முடியாது, அமர்வை நடத்துங்கள் என ஆளும் கட்சியின் வேறு சில உறுப்பினர்கள் தெரிவித்தனர். அதற்கமைய அமர்வு நடைபெற்றது.

அதன்போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. சில உறுப்பினர்கள் உரையாற்றிவிட்டு எழுந்து சென்றனர். சிலர் உரையாற்றாமலேயே சென்றனர். எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா அதிக நேரம் உரையாற்றினார்.

சி.தவராசாவின் சில கேள்விகளுக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பதிலளித்தார். அவர் அது தொடர்பாக சபையில் விளக்கமளித்தார்.

அது தொடர்பாக சபையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றபோதிலும் முடிவுகள் எவையும் எடுக்காமலேயே அமர்வு நிறைவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நீரில் கழிவு ஒயில் இல்லை என அறிக்கையில் கூறப்படவேயில்லை என்கிறார் ஐங்கரநேசன்

(எஸ்.நிதர்ஷன்)

“குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக வடக்கு மாகாண விவசாய அமைச்சு நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையில், குடிதண்ணீரில் கழிவு ஒயில் இல்லை என எந்த இடத்திலும் கூறப்பட்டிருக்கவில்லை. இந்த விடயத்தில் ‘நொதேர்ன் பவரையோ’ வேறு யாரையுமோ காப்பாற்றவேண்டிய தேவையும் எங்களுக்கு இல்லை.”

– இவ்வாறு, வடக்கு மாகாண விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஐங்கரநேசன் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிபுணர் குழுவொன்றை அமைக்க விவசாய அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றதா என எதிர்க்கட்சித் தலைவர் கேட்டிருந்தார். நாங்கள் அமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் எடுத்தபோது ஆளுநரினால் வழங்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரத்தில் நீர்ப்பாசனமும் நீர் வழங்கலும் என்றுதான் இருக்கின்றது.

எங்களுக்கு அதிகாரம் இல்லை என்பது எதிர்க்கட்சித் தலைவருக்கு கடந்த ஒரு மாதத்தில்தானா தெரியும்?

சுன்னாகம் நீர்ப் பிரச்சினை ஆரம்பித்தபொழுது முதலமைச்சர் தலைமையின்கீழ் வெவ்வேறு தரப்பினரை உள்ளடக்கியதாக ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில், விவசாய அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரை இணைத் தலைவர்களாகவும் அரசாங்க அதிபரைத் துணைத் தலைவராகவும் கொண்டு ‘தூய குடிநீருக்கான செயலணி’யொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அந்தச் செயலணி உருவாக்கப்பட்ட காலத்தில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய அந்தப் பதவிக்கு வராமலும் இருந்திருக்கலாம். ஆனால், தொடர்ச்சியாக நடந்த கூட்டங்களில் அவரும் வந்திருக்கின்றார்.

அந்தக் கூட்டங்கள் வாராந்தம், மாதாந்தம் என்ற அடிப்படையில் கூட்டப்பட்டிருந்தன. ஏனெனில், மிக நெருக்கடியான கொதி நிலையில் தண்ணீர்ப் பிரச்சினை இருந்தது.

அப்பொழுது தான் உண்மையைத் தேட ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு அந்தப் பணி என்னிடம் தரப்பட்டது. அதற்கமைய ஆய்வாளர்களைக் கொண்டு ஒரு குழுவை உருவாக்கியிருந்தோம். சகல தரப்பினர்களையும் உள்ளடக்கி பலரின் ஆலோசனைகளையும் பெற்றே செயற்பட்டது.

இதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பிரதம செயலாளர் கையொப்பம் இட்டு அதற்கான செலவீனங்களை உள்ளடக்கி ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அவரால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பெயர்ப் பட்டியலை மாகாண சபையிலும் கொடுத்திருக்கிறேன்.

எங்களுக்கு அதிகாரங்கள் இல்லை என்றால் பிரதம செயலாளரின் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டவுடன் அவர் நிராகரித்திருக்கவேண்டும். அதைவிட, ஆளுநர் நிராகரித்திருக்க வேண்டும்.

பின்னர் நடந்த கூட்டங்களில் ஆளுநரையும் இணைத்துக் கூட்டங்கள் நடைபெற்றன. அவரும் முன்னின்று மாகாண சபைக்கு உதவிகளைச் செய்திருந்தார்.

(இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, பிரதம செயலாளரும் ஆளுநரும் ஒத்துழைத்ததால் சட்டம் சரி என்று சொல்லமுடியாது. உங்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதென்றே நான் கூறுகின்றேன் என்றார்.)

முதலமைச்சரின் அனுமதியுடனேயே இவ்வாறானதொரு குழு நியமிக்க வேண்டிய தேவை எழுந்தது. பின்னர் விவசாய அமைச்சுக்கு ஊடாகவே குழு அமைக்கப்பட்டது. இப்போது கூட இது தொடர்பில் சபைக்கு என்னால் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை யாரும் மறுக்கவில்லை.

அவைத் தலைவர் கூட நீதிமன்றுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றார். அவர் கூட வடக்கு மாகாண சபை ஒன்பது பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளதாகக் கூறியிருக்கின்றார். இதே நேரம் இது தொடர்பாக தொழில் நுட்ப ரீதியாக அதன் விளக்கத்தை நான் கொடுப்பதை விட அந்தக் குழுவினர் தருவது பொருத்தமாக இருக்கும்.

எனினும், இந்த நிலத்தடி நீரில் btex தொடர்பில் நான் சில விடயங்களைக் கூறலாம் என நினைக்கிறேன். கனடாவில் இருந்து ஒருவர் வந்திருந்தார். பெற்றோலிய மாசுகள் ஆயிரக்கணக்கான கூறுகள் இருக்கின்றன. இந்த மாசுகளை அளவிடுவதற்கான சாத்தியம் என்றுமே இல்லாத காரணத்தினால் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மிகவும் ஆபத்தான நஞ்சாக கருதப்படக்கூடிய btex எனப்படுகின்ற நான்கு இரசாயனங்களை அளவிடக் கூடியதாகத் தான் அவர்கள் அதனைக் கருதியிருந்தார்கள். நீங்கள் அதன் கொதி நிலை பற்றிய விளக்கங்களை கொடுத்திருந்தாலும் அதன் விளக்கங்களை உரிய தரப்புடன் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது அவைத் தலைவர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு உங்கள் தலைமையில் குழுவை அமைத்து பரிசீலனைக் குட்படுத்தலாம்.

ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் பற்றிக் கேட்கப்பட்டன. ஒவ்வொரு தரப்பு ஆய்வுகளும் அறிக்கையில் இணைக்கப்பட்டிருக்கின்றன. பலரும் ஆய்வு நடத்தியிருக்கின்றனர். அவை திரிபடைந்து திரிபடைந்து வெவ்வேறான தரவுகள் பலருக்குச் சென்றிருக்கின்றன.

அறிக்கை என்று கூறப்படுகின்ற இந்த அறிக்கையில் நான்கு பிரதிகள் மாத்திரம் தான் தயாரிக்கப்பட்டன. இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை எதனால் கொண்டுவரப்பட்டது என்றும் உங்களுக்குத் தெரியும். பாதிக்கப்பட்ட மக்களின் ஆர்ப்பாட்டங்கள் வற்புறுத்தலின் பெயரில் கொண்டுவரப்பட்டன. அவர்கள் வாராந்தம் ஆய்வின் முடிவுகள் தமக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்று கோரியதால் தான் இடைக்கால அறிக்கைகளும் வந்தன.

அந்தச் செயலணிக் கூட்டத்தின் போதுதான் முதலாவது அறிக்கை கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் சபைக்கும் கொடுக்கப்பட்டது. ஆகவே, நாங்கள் அதனை வெளியே தெரிவிக்கவில்லை எனக் கூறுவது தவறானது.

ஆகவே, யாரையும் காப்பாற்றுவது எமது நோக்கமல்ல. இதேவேளை– இந்த அறிக்கையில், ‘நீரில் எண்ணெய் இல்லை’ என எந்த இடத்திலும் கூறப்படவில்லை. ஆபத்தான மாசுக்கள் இல்லை என்றே அவர்கள் கூறியிருக்கின்றனர். ஆகவே, ‘நொதேர்ன் பவரையோ’ வேறு யாரையுமோ காப்பாற்றும் எண்ணம் எங்களுக்கு இல்லை. – என்றார். (ம)

# இன்றும் நாளையும் மின்தடை

இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் மின்சாரம் தடைப்படும் இடங்கள் குறித்து மின்சாரசபை அறிவித்துள்ளது.

அதன்படி இன்று புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில், தேக்கவத்தை பிரதேசம், குருமன்காடு பிரதேசம் தெற்கிலுப்பைக்குளம் கிராம[illegible] ஆகிய இடங்களிலும் –

நாளை வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில், பாரதி வீதி, பத்மேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் –

மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலை மன்னார் வரை, வங்காலைக் கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்[illegible] உப்பு உற்பத்தி நிலையம் [illegible] தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் ஹவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, [illegible]மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னா[illegible] கடற்படை முகாம், சீனத் [illegible] முகம் ஆகிய இடங்களிலும் மின் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பெண்களைப் போற்றுதும்!

இன்று சர்வதேச மகளிர் தினம்.

ஐ.நாவின் அறிவிப்புக்கு அமைய ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி 'சர்வதேச மகளிர் தினம்' ஆக அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களை விடுவிக்கின்றமையையும், பெண்களுக்கான சமத்துவம், உரிமைகள் போன்றவற்றை வலியுறுத்தி, வென்றெடுக்கும் நாளாகவும் குறியீட்டு ரீதியில் இது அமைகின்றது.

பெண்ணடிமை, பெண்களை இழிவுபடுத்துதல், பெண்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துதல், அச்சுறுத்தி போகப் பொருளாக ருசித்து அவர்களைக் கசக்கி எறிதல், பெண்களை நலிவுற்றோராகக் கருதி அவர்கள் தொடர்பில் பாகுபாடு காட்டுதல் போன்ற சமுதாயக் கெடுதிப் போக்குகளுக்கு எதிராக உலகத்தின் கவனத்தைத் திசை திருப்புவதும், மகளிர் பெருமையை உலகம் மதித்துப் போற்றும் மாண்பை ஏற்படுத்துவதும், மகளிர் தினத்தின் இலக்குகளாகும்; நோக்கங்களாகும்.

பொது அறிவிலும், பொது வாழ்க்கை முறையிலும், சமூகக் கட்டமைப்பிலும், சமூகச் சீர் நெறியிலும் நவீன உலகம் வியந்து போற்றுமளவுக்கு முன்னேறியிருக்கின்றது என்று கூறப்பட்டாலும் மகளிர் விடயத்தில் அது மெச்சத்தக்கதாக இல்லை என்பதே யதார்த்தம்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பெண்களின் நிலைமை முன்னேற்றகரமானதாக இருக்கின்றது என்று கூறப்பட்டாலும் கூட, அங்கும் பெண்களை மெலியராய் நோக்கிப் புறமொதுக்கிப் பாகுபாடு காட்டும் தன்மை நீடிக்கவே செய்கின்றது.

மூன்றாம் உலக நாடுகளிலே பெண்களின் நிலைமை மிக மிக மோசம்.

எந்தச் சமூகத்தில், எந்தக் குடும்பத்தில், எந்தக் குடியில் பிறந்தாலும்கூட, பெண் என்றால் இளக்காரம்தான் என்று நோக்கும் நிலைமை இன்று பரந்துபட்டு நீடிக்கின்றமையை நாம் மறுக்க முடியாது.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக நம் உறவின் அனைத்து அங்கங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்களே. நம் உயிர்ப்பின் தோற்றமே பெண்ணின் கருவறையிலே தானே உற்பவமாகின்றது?

எங்கள் நாட்டைத் தாய் நாடு என்பதும், எங்கள்மொழியைத் தாய்மொழி என்பதும் அன்னையாகிய பெண்ணுக்கு நாம் தரும் பெருமைதான்.

நதிகள், மலைகள் போன்ற இயற்கை அன்னையின் மாண்புகளுக்கும் கூட பெண்ணின் பெயரையே சூட்டுகின்றோம்.

ஒவ்வோர் ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்றும் அவ்வப்போது மகுடம் சூட்டவும் நாம் தவறவில்லை.

ஆனால், சமுதாயத்தில், வாழ்க்கை முறையில் - ஏன் குடும்ப நல்லறத்தில் - பெண்களுக்கு சமத்துவமான உரிமை கொடுத்து, சமதையாக மதித்து வாழ்கின்றோமா என்று கேட்போமாயின், பதில் திருப்தியாக இருக்காது என்பதே நடைமுறை.

அண்மைக்கால அறிக்கைகளின்படி, உலகில் மூன்றில் ஒரு பகுதி பெண்கள், தமது மிக நெருங்கிய உறவினர்களால் உடல் ரீதியான வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஐந்து பெண்களில் ஒருவர் வல்லுறவுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். பெண்களுக்கு எதிரான வன்முறையினால் எழுபது வீதமான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரங்கள் இலைமறை காய் மறையாக நம் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் - பெண்களுக்கு எதிரான - வன்முறைப் போக்கின் ஒரு பிரதிபலிப்பே.

பெண்களுக்கு எதிரான வன்முறை இரண்டு தளங்களிலே கட்டவிழ்கின்றது. ஒன்று - குடும்பச் சூழல்; மற்றையது - சமூகச் சூழல்.

தனிமனிதர்களின் இணைப்பாலே குடும்ப அலகுகள் உருவாகுகின்றன. பெண்கள் மீதான ஆணாதிக்கம் அங்குதான் பிரவாகம் எடுக்கின்றது எனலாம். குடும்பத்தில் உருவாகும் ஆணாதிக்கம், பல சந்தர்ப்பங்களில் பெண்கள் மீதான அடக்குமுறை என்ற எல்லையைத் தாண்டி, பெண்கள் மீதான நேரடி வன்முறையாகி, அதுவே சாதாரண வாழ்வியல் நடைமுறையாகவும் கருதப்பட்டு வருகின்றமையை நாங்கள் காண்கின்றோம்.


குடும்பத்துக்குள் கோலோச்சும் ஆணாதிக்க மேலாண்மை பெண்களுக்கு உடல் ரீதியான தாக்கங்களை மட்டுமல்லாது, உளரீதியாகவும் உணர்வுரீதியாகவும் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றமையைச் சாதாரண வாழ்விலும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு அத்துமீறி செயற்படுகின்றவர்களின் அராஜகம் ஒரு புறம் என்றால், அது வாழ்வின் தவிர்க்கமுடியாத சகஜம் என்று கருதி அந்த அத்துமீறலை, சாதாரண விடயமாகப் பார்த்துப் புறமொதுக்கும் சமூகத்தின் பொறுப்பற்ற போக்கு, அதைவிட மிக மிக மோசமானதாகும்.

ஒரு குடும்பத்தின் உழைப்பாளி ஆணானாலும், அதன் மையவிசையாக பெண்ணே விளங்குவாள். இன்று பல குடும்பங்களில் பெண்ணே உழைப்பாளராகவும் இருக்கும் நிலைமை உள்ளது.

சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் விடயங்களில் பெண்களைச் சமத்துவ மாக மதித்து அவளுக்குரிய மாண்பைப் போற்றும்போதே சமூக மாற்றமும் சமுதாய மறுமலர்ச்சியும் சாத்தியமாகும்.

குடும்பத்திலும், சமூக வாழ்விலும் பெண்ணுரிமை போற்றி, சமத்துவம் பேணி, நீதியான உலக வாழ்வுக்கு வழி செய்வதே இந்த சர்வதேச மகளிர் தினத்தில் நாம் செய்யும் பிரதிக்ஞையாக அமைய வேண்டும்.




## இனிமேல் இந்திய மீனவர்களின் மீது சூடு நடத்தப்பட மாட்டாது என உறுதி

கொழும்பு, மார்ச் 08

இந்திய மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இந்தியத் தரப்பில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அதுபோன்றசம்பவம் இனிமேல் நடைபெறாது என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய துணை குடியரசுத் தலைவர் ஹமீது அன்சாரிக்கு தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தோனேசியாவில் 20 ஆவது இந்தியப் பெருங்கடல் கூட்டமைப்புநாடுகளின்மாநாடு நடைபெற்று வருகிறது.

இம்மாநாட்டில்பங்கேற்றுள்ள இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் ஹமீது அன்சாரி அங்கு இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே ஜனாதிபதி சிறிசேன மேற்படி உறுதிமொழி வழங்கினார் எனவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன. (ம)

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அரசு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 08

தனியார் பஸ் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தற்போதைய அரசு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்தநிலையில், அடுத்த மூன்று மாதங்களுக்குள் உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படாத பட்சத்தில், மாற்று வழிகளை மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் எச் சரித்துள்ளார். (எ)

## சாவகச்சேரி விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

சாவகச்சேரி, கல்லடிமுட்டுச் சந்தியில், ஏ – 9 வீதியில் நேற்றுக் காலை சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் 86 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நுணாவில்மத்தி, வேலாயுதம் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் (வயது 86) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை தெல்லிப்பழையிலிருந்து - சங்கத்தானைக்கு தொழில் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்த போது, ஏ-9 வீதியை முதியவர் கடக்க முற்பட்ட சமயம் விபத்து இடம்பெற்றுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பிராசா அமலதாசன் (வயது 36) என்பவரும் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துதொடர்பில்சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, விபத்து நடந்த இடத்தில் பலர் கூடி சம்பவத்தைப் பார்த்திருந்த போதும், காயமடைந்த முதியவரை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல அவசரம் காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-21-23)

## மகளிர் தின கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 07

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கியூடெக், கரித்தாஸ் சர்வமத சக வாழ்வு அரங்கத்தின் ஏற்பாட்டில் 'மாற்றத்தை ஏற்கத் துணிவோம்' என்ற தலைப்பில் கவனவீர்ப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு, யாழ். பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

## சுகபோக வாகனக் கொள்வனவுக்கு 54 கோடி ரூபா நிதி கோரிப் பிரேரணை

கொழும்பு, மார்ச் 08

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், அமைச்சர்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நாடாளுமன்றில் நேற்று பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

6 அமைச்சர்கள், 3 இராஜாங்க அமைச்சர்கள், 2 பிரதி அமைச்சர்கள் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருக்கு சுக போக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கே இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்காக 53 கோடியே 99 லட்சத்து 62 ஆயிரத்து 500 நூறு ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யக் கோரப்பட்டுள்ளது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கு அனுமதி கோரியும் நேற்று பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்காக 44 கோடி ரூபா தேவை எனக் கோரப்பட்டுள்ளது. (ம)

வாய்ப் புற்றுநோயைத் தவிர்த்து வளமாக வாழ்வோம்!
வாய்ப்புற்று நோய் வரக்கூடிய ஆபத்துள்ளோர்:
- தினமும் வெற்றிலை மெல்லுவோர்
- புகைப் பிடிப்போர்
- புகையிலை மற்றும் பாக்கு சப்புவோர்.
தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

09.03.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : பூசம் மாலை 6.06 வரை
திதி : துவாதசி மு.இ. 10.36 வரை
சுபநேரம் : 07.54 – 09.24 வரை
இராகுகாலம் : 01.54 – 03.24 வரை

# இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க வடக்கு மீனவர் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 08

இலங்கைக்கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கு வடக்கு மாகாண மீனவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களின் படகுகள் விடுவிப்பது குறித்து, அவர்களுடன் பேச்சு நடத்தப்பட்ட பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சின் ஊடக இணைப்புச் செயலாளர் எம்.டி. வன்னிநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், படகு விடுவிப்பு, இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக இந்திய மீன்பிடித்துறை அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று கொழும்பு வரவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கடற்படையினரால் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

இதையடுத்து மீனவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்ற போதிலும் படகுகளை விடுவிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு உறுதியாக இருந்தது.

எனினும், இந்திய மத்திய அரசு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் 2015ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 42 படகுகளை விடுவிப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது பற்றி மீன்பிடி அமைச்சின் இணைப்புச் செயலாளர் கூறியவை வருமாறு:-

42 படகுகளை விடுவிப்பது பற்றி பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இலங்கை அரசு முன்வைத்த சில கோரிக்கைகளுக்கு இந்திய அரசு சாதக சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளது. அதற்கான பிரதியுபகாரமாகவே இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. ஆனாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

படகுகளைவிடுவிப்பதற்கு வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். தமிழக மீனவர்களால் அவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர் பிரச்சினை பற்றி பேசுவதற்காக இந்திய மீன்பிடி அமைச்சர் ஏப்ரல் 4 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். அதன் பின்னர் சகல தரப்புடன் பேசப்பட்டு முடிவொன்று எடுக்கப்படும்''.- என்றார். (ஐ)

## மண்டைதீவில் சமய தீட்சை வெள்ளியன்று

மண்டைதீவு வாழ் இந்து மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபமும், உலக திருச்சபையும் இணைந்து நடத்தும் சைவசமய தீட்சை வழங்கும் நிகழ்வு மண்டைதீவு அருள்மிகு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைகாலை 7 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை இடம்பெறும்.

சிவஸ்ரீ வி.பாலகுமாரக் குருக்கள் தீட்சை வழங்குவார்.

தீட்சைபெற விரும்புவோர் பதிவுகள் தொடர்பான விடயங்களுக்கு பின்வரும் இலக்கங்களோடு தொடர்பு கொள்ளமுடியும்.

மண்டைதீவு மக்கள் முன்னேற்ற ஒன்றியம்: 0773060008, நல்லூர் நாவலர் மணி மண்டபம்: 0213215393, இலங்கை உலக சைவத் திருச்சபை: 0775835372. (இ)



உலகளாவிய வறுமை தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வை வழங்கும், சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் ஹவார்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற் அன்ரூஸ்டன் பதில் வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் ஹர்ச டி சில்வா புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளார். இந்த உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு அபிவிருத்தி தொடர்பில் எதிர்நோக்கப்படும் சவால்கள் தொடர்பில் புரிந்துணர்வை ஏற்படுத்துவது தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கட்டுநாயக்கவில் 75 வீதமான பணிகள் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 08

கட்டுநாயகக விமான நிலைய ஓடுபாதையின் புனரமைப்புப் பணிகள் 75 சதவீதம் பூர்த்தியாகியுள்ளன.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புனரமைப்புப் பணிகளை போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

விமான நிலையத்தின் ஓடு பாதை புனரமைக்கப்படுகிறது. இது 60 முதல் 75 மீற்றர் அகலம் கொண்டதாக புனரமைக்கப்படும். இதன் பின்னர் ஏ-380 ரகத்தைச் சேர்ந்த பெரிய விமானங்களை தரையிறக்கக் கூடியதாக இருக்கும் என்று இதன்போது நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (ஐ)

## இலங்கையர் படுகொலை; நேபாளிகள் மூவர் கைது!

தெற்கு ஆஸ்திரேலியாவில் இலங்கையர் ஒருவரை படுகொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் நேபாள பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் 44, 48 மற்றும் 34 வயதானவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட அடிலெய்ட் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள், 39 வயதான அந்த இலங்கையரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பொறுப்புக் கூறல் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பை உறுதி செய்க!

**பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவது தொடர்பான குழு கோரிக்கை**

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் அனைத்துலக பங்களிப்பை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்று பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவது தொடர்பான ஐ.நா. குழு கோரியுள்ளது.

இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பொறுப்புக் கூறல் பொறிமுறையின் சுதந்திரம் மற்றும் பக்கச் சார்பின்மையை உறுதிப்படுத்துவதற்கு, அனைத்துலகப் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டியது அவசியமானது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், பொறுப்புக் கூறல் பொறிமுறைகளில் அனைத்துலக நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்களின் பங்களிப்பை இலங்கை உறுதிசெய்ய வேண்டும்.

சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அனைத்துலக தரநியமங்களுக்கு ஏற்ப, திட்டங்கள் செயற்படுத்தப்படவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெருமளவு தனியார் நிலங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பது, சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடுகள், பெரும் எண்ணிக்கையான பெண்களும், ஆண்களும் இடம் பெயர்ந்திருக்கின்றமை, தொடர்ந்தும் இடம்பெயர்ந்தோரின் 32 முகாம்கள் இயங்குவது என்பன கரிசனைக்குரிய விடயங்களாகின்றமைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மீள்குடியமர்வுக்கு இராணுவமயமாக்கல், பெரும் தடையாக இருக்கிறது.- என்றுள்ளது. (ஐ)


**மணமக்கள் விபரம்**

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

**மணமகன் விபரம்**

**4675 | வே +செ**
1977 | திருகோணமலை | 170 cm
Surveyor Assistant | இலங்கை
சுவாதி (துலாம்) | கி.பா: 31

**5228 | வே**
1979 | இணுவில் | 168 cm
Graphic Designer | இலங்கை
உத்தராடம் (மகரம்) | கி.பா: 52

**5689 | வே**
1979 | யாழ்நகரம் | 168 cm
Driver | இலங்கை | கிறிஸ்தவம்
ரோகிணி (ரிஷபம்)

**4241 | வே**
1980 | நெல்லியடி | 168 cm
Director | (Divorced) | இலங்கை
அத்தம் (கன்னி) | கி.பா: 24

**4000 | வே**
1984 | புலோலி | 168 cm
Management | இலங்கை
சதயம் (கும்பம்) | கி.பா:16

**மணமகள் விபரம்**

**7461 | வே**
1991 | யாழ்நகர் | 167 cm
Engineer | இலங்கை
திருவோணம் (மகரம்) | கி.பா: 9

**3306 | கோ**
1988 | கொழும்பு | 165 cm
QA Engineer | இலங்கை
விசாகம் (துலாம்) | கி.பா: 34

**7485 | வே**
1994 | அச்சுவேலி
Tailor | இலங்கை
பரணி (மேடம்) | செவ்: 12

**6584 | வே**
1988 | தெல்லிப்பளை | 168 cm
Software Engineer | இலங்கை
உத்திரட்டாதி (மீனம்) | கி.பா:72 | செவ்: 7

**4708 | வே**
1987 | பண்டத்தரிப்பு | 162 cm
Doctor | இலங்கை | கி.பா: 28
கேட்டை (விருச்சிகம்) | சூரி செவ்: 5

**அருந்ததி**
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# இம்முறை யொவுன்புர நிகழ்ச்சி திருமலையில்!

## அலரிமாளிகையில் பிரதமர் தெரிவிப்பு



நாட்டின் சகல பாகங்களையும் அபிவிருத்தி செய்வதே அரசின் நோக்கமாகும். ஆற்றல் மிக்க இளைஞர், யுவதிகள் அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படும் வகையில், இந்த மாதத்துக்குரிய யொவுன்புர நிகழ்ச்சி திருகோணமலையில் இடம்பெறும்.

-இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எடின்பரோ பிரபுவின் பெயரால் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு நிகழ்ச்சி அலரிமாளிகையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆற்றல் மிக்க இளைஞர், யுவதிகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான திட்டத்தை அமுலாக்குமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள இளைஞர் மற்றும் யுவதிகள் பல்வேறு திறமைகளைக் கொண்டிருக்கிறார்கள். வெசாக், நத்தார், முதலான சமய நிகழ்ச்சிகளின் போது இவர்களின் திறமை வெளிக்கொணரப்படுகிறது.

இளைஞர் நாடாளுமன்றத்தில், தேசிய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இளைஞர், யுவதிகள் இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் திறமைகள் மறைந்திருக்கின்றன. இந்தத் திறமைகளை வெளிக்கொண்டு வர ஏற்பாடு இல்லாமை கவலைக்குரிய விடயமாகும். -என்றார். (ச)

## மீனவர்களின் வலையில் சிக்கிய வெடிபொருள்கள்!

சம்பூர் கிவிலியாப் பகுதிக்கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையில் வெடிபொருள்கள் அடங்கிய பொதி ஒன்று அகப்பட்டது.

வலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் பொதி ஒன்று அகப்பட்டதைக் கண்ட மீனவர்கள் பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்கினர். இதனை அடுத்து, அங்கு சென்ற வெடிபொருள்களை மீட்டுள்ளனர்.

சினைப்பர் துப்பாக்கி -1,எல்.எம்.ஜி ரக துப்பாக்கி -1, ரிப்பிட்டர் ரக துப்பாக்கி-1, ரீ81 ரக துப்பாக்கி 1, 2 மகசீன்கள் ஆகியன மீடகப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு,மார்ச் 08

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகல்லாற்றைச் சேர்ந்த கே.கிருபாகரன் (வயது-54) என்பவரே படுகாயம் அடைந்தவர் ஆவார்.

கல்முனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறி திடீரென பழுதடைந்து நின்றதையடுத்து, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மேற்படி லொறியின் மீது மோதியதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கிழக்கு கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தில்

# 172 அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை!

அம்பாறை,மார்ச் 08

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 172 அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இந்நிலையில், இங்கிருந்து மத்திய அரசின் கீழ் உள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு எவரையும் விடுவிக்கக் கூடாது என இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு மேற்படி சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.முஹம்மட் முக்தார்,நேற்று செவ்வாய்க்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தின் வலயக்கல்வி அலுவலகங்கள், கோட்டக்கல்வி அலுவலகங்கள் என்பவற்றில் காணப்படும் பதவி நிலை உத்தியோகத்தர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவுகிறது. இதனால் மிகப்பெரிய நிர்வாகப் பிரச்சினையை கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு எதிர்கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இந்த வெற்றிடங்களுக்காகவே மத்திய கல்வி அமைச்சு மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை இடைக்கால ஏற்பாடாக அனுப்பி வைத்துள்ளது.இந்நிலையில், அரசியல் காரணங்களுக்காகவும், சில அழுத்தங்களுக்காகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை கிழக்கு மாகாண அரச சேவையிலிருந்து மத்திய அரசு சேவைக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு மூலமாக விடுவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.அவ்வாறான விடுவிப்புகள் இடம்பெற்றால் எமது சங்கம் நீதி மன்றம் மூலம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

இதேவேளை,இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக்குறிப்பு,கிழக்கு மாகாணப் பாடசாலைகள் எவற்றுக்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் எவரையும் அதிபர்களாக நியமிக்கப் படுவதை அங்கீகரிக்காத நிலையில், கிழக்கு மாகாணத்திலுள்ள சில பாடசாலைகளில் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சிலர் அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். அவர்களை உடனடியாக அலுவலகங்களுக்கு திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (ச)

## திருமலை வைத்தியசாலையில் தினசரி 100 டெங்கு நோயாளர்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நாளொன்றுக்கு சுமார் 100 டெங்கு நோயாளர்கள் சேர்க்கப்படுகின்றனர் என அவ்வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் ஆர்.அனுசியா தெரிவித்தார்.

திருகோணமலை நகரம் மற்றும் கிண்ணியா போன்ற இடங்களிலிருந்தே அதிகளவானோர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் மாணவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக வைத்தியசாலையில் இடவசதி போதாத நிலைமை காணப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆதரவு தெரிவித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்





வந்தாறுமூலை,மார்ச் 08

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் காந்தி பூங்காவில் நடத்தி வரும் காலவரையறையற்ற கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வந்தாறுமூலை வளாக முன்றிலில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் மூவின மாணவர்களும் கலந்து கொண்டனர்.

'நல்லாட்சி அரசு மெல்லக் கொல்லும் விசமா?', 'பிரதமர் வழங்கியமை 6 மாத அவகாசம், நாங்கள் பட்டம் முடித்தோ பல வருடங்கள்', 'தொழிலுக்கு உதவாத கல்வி எமக்கு எதற்கு?', 'கண்விழித்து படித்தது வீதியில் உறங்கவா?', 'அரசே வேலை வாய்ப்புக்கான தேசிய கொள்கையை உருவாக்கு', 'காலத்தைக் கடத்தாமல் வேலைவாய்ப்புக்களை வழங்கு' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரிகள் அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. நாங்களும் எமது பட்டப்படிப்பை முடித்த பின் போராட்டம் நடத்தி வேலைபெறும் நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது. இந்நிலைமை மாற அரசு தேசிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும். -என்றனர். (ச)

## டெங்குக் காய்ச்சல்: திருமலையில் ஒருவர் சாவு!

திருகோணமலை,மார்ச் 08


திருகோணமலையில் டெங்குக் காய்ச்சல் காரணமாக ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.


குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த எம்.ஹாலித் (வயது-43) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர், கிண்ணியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

## பொதுமக்கள் காணிகள் தனிநபரால் சுவீகரிப்பு

### கர்பலா கிராமத்தவர்கள் முறைப்பாடு





மண்முனைப்பற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கர்பலா கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை தனி நபர் ஒருவர் சுவீகரித்துள்ளார் எனக் கூறி காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட 178 பேர் இதுவரையில் முறைப்பாடு செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கிராமத்தில் 312 பேருக்குச் சொந்தமான 13 ஏக்கர் காணிகளை மேற்படி நபர் சுவீகரித்துள்ளார். சுவீகரித்தது மாத்திரமன்றி, அவற்றுக்குப் போலியான உறுதிகளை எழுதியுள்ளார் எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் கடந்த ஒரு வார காலமாக முறைப்பாடுகள் கிடைத்துவரும் நிலையில், இது தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

## மட்டு. மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின்

# தலைவர் உட்பட நால்வருக்கு நீதிமன்றால் அழைப்பாணை!


மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் மற்றும் ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் உட்பட 4 பேரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி வேலையற்ற பட்டதாரிகள் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நடத்திய கவனவீர்ப்புப் பேரணியின் போது,பொலிஸார் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் ஆகியோரின் கடமையைச் செய்ய விடாது இடையூறு விளைவித்தார்கள் மற்றும் சுமுகமான நிலைமையைக் குழப்பும் வகையில் நடந்து கொண்டார்கள் போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து மேற்படி 4 பேருக்கும் எதிராக நீதிமன்றத்தில் மட்டக்களப்புப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை அடுத்தே இவர்களுக்கு இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டது. (ச)

காலைக்கதிர்



# அம்பாந்தோட்டையில் கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளது அமெரிக்க கடற்படை!



கொழும்பு, மார்ச் 08

அமெரிக்க- இலங்கைப் போர்க்கப்பல்கள் நேற்றைய தினம் அமைபாந்தோட்டைத் துறைமுகப் பகுதியில் கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளன. அந்தப் பயிற்சி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளது.

'பசுபிக் ஒத்துழைப்பு -2017' என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக அமெரிக்க கடற்படையின் அதிவேக போக்குவரத்து கப்பலான 'போல் ரிவர்' நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்தது.

2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட பின்னர், பசுபிக் ஒத்துழைப்பு என்ற மனிதாபிமான மற்றும் நிவாரண கூட்டு ஒத்துழைப்பு பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள 12 ஆவது பசுபிக் ஒத்துழைப்பு பயிற்சி தெற்காசியாவில் நடத்தப்படும் முதலாவது கூட்டுப் பயிற்சியாகும்.

அமெரிக்க கடற்படைக் கப்பலான 'போல் ரிவரில்' வந்துள்ள 104 அமெரிக்க, ஜப்பானிய, ஆஸ்திரேலிய கடற்படை மரைன் கொமாண்டோக்கள், இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

பின்னர் 60 அமெரிக்க கடற்படையினர் மற்றும் மரைன் கொமாண்டோக்கள் இந்தப் பயிற்சியில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியக் கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ். காரியலும் இந்தப் பயிற்சியில் இணைந்து கொள்ளவுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அமெரிக்க கடற்படைக் கப்பலான போல் ரிவரில் நேற்று இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தென்மாகாண ஆளுநர், முதலமைச்சர், தென்மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் செயலர்கள், பங்கேற்றுள்ளனர்.

அமெரிக்காவின் பசுபிக் கப்பல்படையின் தளபதி நியர் அட்மிரல் கப்ரியெல்சனும் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்.

இறுதிப் பயிற்சி நிகழ்வும், சுனாமி அனர்த்தங்களின் போது கடலில் எவ்வாறு உதவுவது என்பது குறித்த ஒத்திகையும், எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி ஒத்திகை நிறைவு நிகழ்வு இடம்பெறவுள்ளது. அதையடுத்து, இலங்கை கடற்படையின் எஸ்.எல்.என்.எஸ். சமுத்ர கப்பலுடன் இணைந்து அமெரிக்க கப்பல் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி மியன்மார் நோக்கி அமெரிக்க கப்பலான போல் ரிவர் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

போல் ரிவர் கப்பல் அம்பாந்தோட்டையில் பயிற்சியில் ஈடுபடும் போது இலங்கை கடற்படையினர் அதில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### விலை மனுக் கோரல்கள் தொடர்பில்

## நிதி மோசடிப் பிரிவின் விசாரணைக்கு தடைவிதித்தார் பிரதமர் ரணில்!



கொழும்பு, மார்ச் 08


விலை மனுக் கோரல்கள் தொடர்பில் விசாரணைகளை நிதி மோசடி விசாரணைப் பிரிவு மேற்கொள்ளக்கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு இந்தப் பணிப்புரையை பிரதமர் விடுத்துள்ளார்.

விலை மனுக் கோரல் மோசடிகள் குறித்து தேசிய கொள்கைகள் ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அத்துடன், விலை மனுக் கோரல் மோசடி குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளுக்காக அரச அதிகாரிகள் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அடிக்கடி அலைய வேண்டியிருப்பதைத் தவிர்க்க இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இனி வரும் காலங்களில் விலை மனுக் கோரல் மோசடிகள் தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்த மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையின் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள ஈரான் விருப்பம்!



கொழும்பு, மார்ச் 08

இலங்கையின் சந்தையில் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தமது நாடு விருப்பம் கொண்டிருக்கிறது என்று ஈரான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மொஹமட் ஜவாட் சரீப் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


ஈரான் நாட்டைச்சேர்ந்த தனியார் நிறுவனங்கள் இலங்கையுடன் வர்த்தக நடவடிக்கைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் தொழில்நுட்பம் மற்றம் பொறியியல் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் விருப்பத்துடன் இருக்கின்றன என்றும் ஈரான் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் போது ஈரானுடனான தொடர்புகளை சுட்டிக்காட்டிய கரு ஜயசூரிய, ஈரான் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவில் 4 நாடுகளின் தலைவர்களுடன் மைத்திரி பேச்சு!

### அங்கு வாழ்ந்துவரும் இலங்கையருடனும் சந்திப்பு









கொழும்பு, மார்ச் 08

இந்தோனேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தென்னாபிரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட நான்கு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் விளிம்பு நாடுகள் அமைப்பின் தலைவர்களின் உச்சி மாநாடு இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் ஜகார்த்தா சென்றடைந்தார். அவரை ஜகார்த்தா விமான நிலையத்தில் இந்தோனேஷிய உள்துறை அமைச்சர் வரவேற்றுள்ளார்.

நேற்றுக் காலை இந்தியப் பெருங்கடல் விளிம்பு நாடுகள் அமைப்பின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் ஜனாதிபதி மைத்திரி உரையாற்றியுள்ளார்.

அதையடுத்து, ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல், தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சுமா, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரி ஆகிய தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி மைத்திரி திட்டமிட்டுள்ளார் என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தோனேசியா விஜயத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனும் அங்கு வாழும் இலங்கையர்களுடன் சந்திப்பொன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்தோனேஷியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதியின் வருகையை நினைவுகூருமுகமாகத் தூதுவர் அலுவலக வளாகத்தில் நாக மரக்கன்று ஒன்றும் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி-

அரசாங்கம் தொடர்பில் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகப் பல்வேறுப்பட்ட தவறான பிரசாரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் போலி பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாம் என சர்வதேச நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மலையகப் பிரதேசங்களில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படும் இந்திய வீட்டுத்திட்டம்

## நேரில் பார்வையிட்டார் இந்தியத் தூதுவர்



இந்திய அரசு பரீட்சார்த்தமாகவே இந்திய வீடமைப்புத் திட்டத்தை மலையகப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அது வெற்றியளித்தால் எதிர்காலத்தில் மலையகத்தில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன் ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் நடை முறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதி நுவரெலியா, பூண்டுலோயாடன்சினன் பகுதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக இந்திய அரசு 9 லட்சத்து 50 ஆயிரமும் புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சு ஒரு லட்சத்து 50 ஆயிரமும் வழங்கியுள்ளது.

இந் நிதி மூலம் 550 வீடுகள் அமைக் கப்படவுள்ளன. இதன் முதலா வது வீட்டை எதிர்வரும் 10ஆம் திகதி திறந்து வைக்க முடியும் என்று கட்டுமான பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் கட்டட நிர்மாணப் பணிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

வீடமைப்புத் திட்டத்தை பார்வையிட்ட பின்னர் உரையாற்றிய இந்தியத் தூதுவர்-

இந்த வீடமைப்புத் திட்டத்தை நாம் பரீட்சார்த்தமாக தற்போது நடை முறைப்படுத்தி வருகின் றோம். இந்தத் திட்டம் வெற்றி பெறுகின்ற பட்சத்தில் இது போன்ற திட்டங்களை நாம் எதிர் காலத்தில் பெருந் தோட்டப்பகுதிகளில் நடைமுறைப்படுத்த தீர்மானித்திருக்கின்றோம்.

இந்தத் திட்டத்தில் பெண்களுடைய பங்களிப்பு அதிகமாக இருப்பது மிகவும் வரவேற்கக் கூடிய ஒரு விடயம். வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற வீடுகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பெண்களிடமே இருக்கின்றது.-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 08.03.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு மாசித்திங்கள் 24ஆம் நாள் ஏகாதசித்திதி இரவு 10.49 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம்: புனர்பூசம். இரவு 7.45 மணி வரை. பின்னர் பூசம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 12.21 மணி முதல் 1.51 மணி வரை. சுபநேரம்: மாலை 4.49 மணி முதல் 6.18 மணி வரை. இன்று ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: மாசிமாத வளர்பிறை ஏகாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு புனர்பூசம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழிலில் நற்பலன்கள் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு அனுகூலமான சூழ்நிலை உண்டாகும்.

**ரிஷபம்:** அனுகூலமான நாள். நீண்ட நாளைய எதிர்பார்ப்பு நிறைவேறும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். திருமண காரியங்கள் பலிதமாகும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**கடகம்:** கவலையான நாள். எதிர்பார்த்த காரியங்கள் தாமதமாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். விருப்பமற்ற இட மாற்றம் கிடைக்கும்.

**சிம்மம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். திருமண யோகம் உண்டு. மாணவர்களுக்கு உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**கன்னி:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். எடுக்கும் எந்த முயற்சிகளும் தாமதமாகும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை.

**துலாம்:** இன்பமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். திருமண வாய்ப்புகள் கனிந்து வரும்.

**விருச்சிகம்:** குழப்பமான நாள். தனவரவு குறையும். தொழிற் கஷ்டங்களால் மனம் விரக்தியடையும். திருமணப் பேச்சு குழப்பமடையும்.

**தனுசு:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. நினைத்த காரியங்கள் கைகூடாமற் போகும். தொழிலில் பிரயாசையும், அலைச்சலும் அதிகரிக்கும்.

**மகரம்:** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். உத்தியோகத்தர்களின் திறமைகள் பரிச்சிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் பெருகி, வாழ்க்கைத் தரம் உயரும்.

**கும்பம்:** மேன்மையான நாள். பெண்களால் அதிக ஆதாயம், உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். வியாபாரிகள் அதிக வருமானம் பெறுவார்கள்.

**மீனம்:** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் அமைதி குறையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும், வசதியற்ற இட மாற்றமும் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை, மூலம், உத்தராடம், முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்களைத் தவிர்க்கவும்.

# முன்னாள் போராளிகள் 200 பேர் பொலிஸ் சமூகநல பிரிவில் இணைப்பு!

## சிவில் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 08

சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் புனர்வாழ்வளிக் கப்பட்ட முன்னாள் போராளிகள் 200 பேரை, வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பொலிஸ் சமூகநலப் பிரிவுடன் இணைத்துக் கொள்வதற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் மொழிக் கையாள்கையில் நிலவும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என சிவில் பாதுகாப்புத்திணைக்கள ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் புனர்வாழ்வு பெற்ற சுமார் 3ஆயிரத்து 500 இற்கும் அதிகமான முன்னாள் போராளிகள் சிவில் பாதுகாப்புச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேலும் பொலிஸ் துறை, சட்டம் மற்றும் ஒழுங்கு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட விடயங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மொழிக் கையாள்கையில் நிலவும் பிரச்சினைகளுக்கும் இதன் ஊடாக தீர்வை எட்ட முடியும்.

பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளான சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தொடர்பில் பொலிஸாருடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்படவுள்ளது.

பொலிஸ் சேவையில் ஏற்கனவே புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளான சுமார் ஆயிரத்து 950 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்திலும் தேவையின் அடிப்படையில் முன்னாள் போராளிகளான சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் களை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பொலிஸ் சேவையில் இணைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். -என்றார். (எ)

# இடைக்கால அபிவிருத்திப் பணிகள்; ஆரம்பித்தது ரயில்வே திணைக்களம்

ரயில்வேத் திணைக்களம் இடைக்கால அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருப்பதாக ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதன்கீழ் ரயில் பாதையைப் புனரமைப்பதற்காக இருவழிப் பாதையை நிர்மாணித்தல், பழமைவாய்ந்த சமிக்ஞை கட்டமைப்புக்குப் பதிலாக புதிய கட்டமைப்பைப் பொருத்துதல், காலங் கடந்த பழைய 200 ரயில் பெட்டிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பழைய பாலங்கள் அகற்றப்பட்டு புதிய பாலங்கள் பொருத்தப்படுகின்றன. இரத்மலானை, தெமட்டகொட ரயில் நிலையங்களை நிர்வகித்தல், தொழிற்சாலை மற்றும் பிரிவுகளை விரிவு படுத்துதல் ஆகியனவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் கடனுதவியின் கீழ் 10 ரயில் எஞ்சின்களும், ஆறு அதிவேக எஞ்சின்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கான உடன்படிக்கை சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டன. இவற்றுக்காக 100 மில்லியனுக்கு மேற்பட்ட அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது.

எதிர்வரும் ஒன்றரை வருட காலப்பகுதியில் இவை சேவையில் இணைத்துக் கொள்ளப்படும்.-என்றார். (எ)

## அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 08

அரச பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்களுக்கு இராணுவக் கல்லூரியில் பயிற்சிச் செயலமர்வை நடத்துவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மாத்தறை வலயத்திலுள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களையும் ஊவா குடாஓய கொமாண்டோ ரெஜிமெண்ட் பயிற்சிக்கல்லூரிக்கு, எதிர்வரும் 22 ஆம் திகதி பயிற்சிக்கு வருமாறு தென் மாகாண கல்வித் திணைக்களத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எதிர்பை வெளியிட்டுள்ளார்.(எ)

# கிராண்பாஸில் ஹெரோயின் மீட்பு

கொழும்பு, மார்ச் 08

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

1.3 கிலோ கிராம் நிறை கொண்ட இந்தப் போதைப் பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 37 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட ஹெரோயினின் சந்தைப் பெறுமதி 80 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஹெரோயின் தொகை கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட ஹெரோயின் போதைப் பொருளை கிராண்ட்பாஸ் பகுதிக்குக் கொண்டு வருவதற்காக பயன் படுத்தப்பட்ட கார் தொடர்பாகவும் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# அடிமையிலிருந்து விடுதலை நோக்கி...

ஞானசக்தி ஸ்ரீதரன்
(பெண்கள் விழிப்புணர்வு அரங்கம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெருமளவில் நிகழும் இடங்களாக எமது பிரதேசங்கள் மாறியுள்ளன. பெண்கள், சிறார்களுக்கான சமூக பாதுகாப்பு அச்சம் தரும் வகையில் குறைந்துள்ளது. ஆளரவமற்றுப் போகும் ஊர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் களமாக மாறுகின்றன.

கைக்கோடாரி, வாள் வீச்சு, கோஷ்டிகள் பொதுவாக சமூகத்துக்கு மாத்திமல்ல குறிப்பாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இலக்காகக் கொண்டவை.

இலங்கையின் சமூக வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதே 2015 ஜனவரி 8 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பிரதான வாக்குறுதியாக இருந்தது.

இந்த பிரதான வாக்குறுதி கருதியே அனைத்து இன சமூக மக்களும் ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்தார்கள். தற்போது அரசமைப்பு சீர்திருத்தத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், இன சமூகங்களின் சமத்துவமான ஐக்கியம் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினர் பால்நிலை சமத்துவம் சுற்றாடல் பற்றிய அக்கறைகள் எந்தளவு தூரம் அழுத்தமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன என்றாலும் சமகால உலகுடன் வேகமாக நடைபோட எம்மால் முடியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நில ஆக்கிரமிப்பு- பாலியல் வன்முறைகள் படுகொலைகள் தொடர்பான போராட்டங்களில் பெண்களே முன்னிலை வகிக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவதும், பொது மற்றும் தனிப்பட்ட வாழ்வு கண்காணிக்கப்படுதல் மற்றும் அச்சமூட்டும் தொல்லைகள் இலங்கையில் பூரணமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

தொழில்துறைகள், கல்வி, உயர் கல்வி, மருத்துவம், சட்டம் ஆகியவற்றில் பெண்கள் குறிப்பிடத் தகுந்தளவு பிரவேசித்திருக்கிறார்கள் எனினும் சமூக வாழ்வில் ஆண்- பெண் சமத்துவம் நிலை நாட்டப்படுவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது.

சமூகத்தில் - குடும்பத்தில் வன்முறை என்பது அன்றாட நிகழ்வாக இருக்கிறது. வன்முறை என்னும்போது செயல் ரீதியான வன்முறைகள் மாத்திரமல்ல. ஊடகம் - அரசியல் - குடும்பம் எல்லா இடங்களிலும் கருத்து - உளவியல் ரீதியாக அன்றாடம் இந்த வன்முறைகள் நிகழ்கின்றன.

நீதி- சமூக முன்னேற்றம் மிகப் பிரபலமாக அறியப்பட்ட பாலியல் பலாத்கார படுகொலைகள் தொடர்பாகவே நீதி நிலை நாட்டப்படுவது தாமதமாகிறது. பல படுகொலைகள் வன்முறைகளின் பின்னணி இன்னும் அறியப்படாததாக மர்மம் நிறைந்ததாக இருக்கின்றன.

பொது வெளியிலும் குடும்பத்திலும் பெண்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாமல் சமூக பொருளாதார முன்னேற்றம் சாத்தியமில்லை. குறிப்பிடத்தகுந்த அளவு ஆண், பெண் சமத்துவம் நிலவும் நாடுகளில் அந்த முன்னேற்றங்களை நாம் அவதானிக்க முடியும்.

ஜனநாயகம், மனித உரிமை தொடர்பான உள்ளடக்கங்களை வலுப்படுத்துவதற்கும் ஒரு சமூகம் தன்னை நாகரிகமான சமூகமாக மறுசீரமைத்துக் கொள்வதற்கும் இந்த சமத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும்.




ஒரு மக்கள் கூட்டம் எந்தளவு தூரம் நாகரிகமானது, செழுமைமிகு பண்பாட்டைக் கொண்டது என்பது பால் சமத்துவம், சமூக நீதி எந்தளவு தூரம் பிரயோகிக்கப்படுகிறது என்பதிலிருந்தே அளவிட முடியும். காந்தியடிகள் கூறியது போல் நள்ளிரவில் தனியாக பெண் வீதியில் செல்வதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பட்டப் பகலில் கைக் கோடரி - வாள்களுடன் அட்டகாசம் புரிவோர் பரவலாக இருக்கும் சமூகத்தில் இராணுவ மயப்பட்ட சூழலில் பெண்களின் சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது. ஆண் தலைமைத்துவ மரபார்ந்த சமூக முறைமைகள் ஆற்றல் உள்ள பெண்களின் சமூக சந்தர்ப்பங்களை தலைமுறை தலைமுறையாக அழித்துள்ளது.

விஞ்ஞானிகளாகவும், மருத்துவர்களாகவும் கணித - சட்ட அறிஞர்களாகவும் , தொழில் துறை முனைவோராகவும் எழுத்தாளர்கள், படைப்பாளர்களாகவும், கவிஞர்களாகவும் பிர்காசிக்கக் கூடிய பெண்கள் தலைமுறை தலைமுறையாக சமூகத்தளை- பாரம்பரிய விலங்குகள்- பாரச் சங்கிலிகளால் சந்தர்ப்பங்கள் இழக்கச் செய்யப்பட்டது மாத்திரமல்ல குடும்பப் பெண்களாக வார்க்கப்பட்டிருக்கிறார்கள். இது பிரக்ஞை அற்ற இயல்பானதென்று கருதப்படும் அடிமை முறையாகும்.

### தமிழர்கள் மத்தியில் சமத்துவ சிந்தனை?

தமிழர் - தமிழ் என்று உணர்ச்சி வசப்படுத்தும் சமூக ஆதிக்க சக்திகளுக்கு இது பற்றிய கரிசனை எவ்வளவு தூரம் இருக்கிறது தமிழ் அரசியல் சமூக அரங்கில் பெண்களுக்கான இடைவெளி காணப்படுகிறதா? இந்த மரபார்ந்த இழிவிலிருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும்.

படித்துச் சொந்த காலில் நிற்க கூடிய பெண்கள் கூட சீதன முறைமை உட்பட மரபு, சம்பிரதாயங்களின் பெயரில் தமது ஆளுமையை - அடையாளத்தைத் தொலைக்க வேண்டிய நிலை.

தமது கல்வி இதர முயற்சிகளின் ஊடாகப் பிரகாசித்த பெண்கள் கூட, வெளிநாட்டில் தொழில் புரியும் ஒருவருக்கு மனைவியாகி விட்டால் தமது அறிவு, ஆற்றல், ஆளுமைக்குசம்பந்தமில்லாமல் வீட்டு வேலைகளில் முடக்கப்படும் நிகழ்வுகள் அனேகம். தாம் தீர்மானம் எடுக்கும் உரிமையை பல சந்தர்ப்பங்களில் இழக்கிறார்கள்.

சட்டங்களில் பால் சமத்துவம் கணிசமான அளவு உள்ளடக்கப்பட்டிருந்தாலும் சமூகத்தில் எவ்வளவு தூரம் நடைமுறையில் சாத்தியமாகிறது.

சமத்துவம் பாடசாலை மட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் - அலுவலகங்கள் - ஆலயங்கள்- சம்பிரதாயங்கள் - சடங்குகள் பொது வெளியில் பெண்களை கீழ்மைப்படுத்தும் அம்சங்கள் இயல்பு போல் சாதாரணம் போல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த நிலை கலாசாரப் பெருமிதமாகப் பார்க்கப்படுகிறது.

யாழ். கலாசாரம் என்பது பெண்களை சிறுமைப்படுத்துவதையும் உள்ளடக்கியதே. பால் நிலை - தீண்டாமை அநீதிகளை பேசாமல் கடந்து செல்வதே தமிழ் ஆதிக்க அரசியல் சமூக சிந்தனையின் சாராம்சம் ஆகும்.



இன்று மகளிர் தினம்.
அதனை முன்னிட்டு
இந்தக் கட்டுரை
பிரசுரமாகிறது.

### எவ்வாறு சமத்துவத்தை நிலை நாட்டுவது?

★ கல்வி அறிவூட்டல் , கல்வி முறையில் சீர்திருத்தம்.

★பாடவிதானத்தில் பெண்கள் சமூக நீதி முன்னுரிமை.

★ செய்தி ஊடகங்களில் பால் சமத்துவத்தை உறுதி செய்தல்.

★ பிரக்ஞை உடனோ இல்லாமலோ பாரபட்சமான அநீதியான செய்திகள் வெளிவருகின்றன. குடும்பத்தில் வீட்டு வேலையில் இரு பாலருக்குமிடையே சமத்துவமான பகிர்வு.

★ பொது வெளியில் பெண் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்.

★ மகப்பேறு காலத்துக்கு முன்னும் பின்னுமான விடுமுறைக் காலம்.

★ பொது வெளியில் பெண்களுக்கான பாதுகாப்பான சுகாதாரமான கழிப்பறைகள்.

★ பாடசாலை, தொழில் புரியும் இடம், வீதிப் போக்குவரத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்பூட்டல்.

★பணிப் பெண்களாக மத்திய கிழக்குக்கு பெண்களை அனுப்புவது பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

★ ஒரே மாதிரியான நாள்- மணி நேர வேலைக்கு சமமான சம்பளத்தை உறுதி செய்ய வேண்டும்.

★ பெண் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் -தோட்டத் தொழிலாளர்கள்.

★ காப்புறுதி தொழில் - பாதுகாப்பு - உடைகள் - வீடு பிள்ளைகள் பராமரிப்பு ஏற்பாடுகள்.

★ மத கலாசார சம்பிரதாயங்களின் பேரில் பெண்கள் மீது திணிக்கப்படும் நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபடல்.

★ சுயமாக சிந்தித்துச் செயற்படுவதற்கான இடைவெளியை உருவாக்குதல் பாதுகாத்தல்.

★சீதன முறையை இல்லாதொழித்தல்.

★ நிர்வாக- சேவைத்துறைகளில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிவகைகள்.

★ மரபார்ந்த கல்வி முறைக்கப்பால் பால் சமத்துவத்தை வலியுறுத்தும் கல்வி இயக்கத்தை உருவாக்குதல்.

★ மகளிர் சுய உதவிக் குழுக்களை விரிவாக்கல்.

★ பெண் தொழில் முனைவோரை உருவாக்குதலும் ஊக்கப்படுத்தலும்.

★அரசியல் அதிகாரக் கட்டமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 50 வீதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுதல்.

★சட்டம் மாத்திரமல்ல, மன நிலையில் மாற்றம் வேண்டும்.

★விவசாயம், மீன்பிடி, இதர கைவினை மற்றும் தொழில்களில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் கண்டறியப்பட வேண்டும்.

★பெண்கள் தலைமை தாங்கும் குடும் பங்களுக்கான விரிவான நம்பிக்கை அளிக்கக் கூடிய சமூக ஏற்பாடுகள்.

★கிராம நகர உழைக்கும் வர்க்க சமூக அநீதிகளை எதிர் நோக்கும் சமூகத்தின் பெருவாரியான பெண்களின் நலன்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்.

★ சட்டங்களில் பெண்களின் உரிமைகள் தொடர்பாக பல ஏற்பாடுகள் இருந்தாலும் நடைமுறையில் அவை பிரயோகிக்கப்படுவதில்லை.

★ சொத்துரிமை விவாகரத்துரிமை போன்ற முக்கியமான விடயங்கள்

பெண்களின் சொத்து திருமணத்துக்குப் பின் ஆண்களுக்கும் தீர்மானிக்கும் உரிமையை வழங்குகிறது.

★சமய சடங்குகள் சம்பிரதாயங்களில் உள்ள இரண்டாம் பட்சமான நிலையிலும் மாற்றம் வேண்டும்.

★குடும்பச் சுமையைக் குறைப்பதற்கான வழிகள்.

★ மரபார்ந்த பிரக்ஞை அற்ற மேலாதிக்க சிந்தனைகளைக் களைவதற்கான செயற்திட்டங்கள்.

★பாடசாலைகள் - பல்கலைக்கழகங்கள் - சன சமூக நிலையங்கள்- காரியாலயங்கள்- கல்வி, வேலை வாய்ப்பு, தொழில், விளையாட்டு போன்றவற்றில் சம சந்தர்ப்பத்தை உறுதி செய்தல்.

★ பெண்களின் பிரச்சினைகளை அணுகுவதற்கு வைத்தியசாலைகள் பொலிஸ் நிலையங்களில் பிரத்தியேக கட்டமைப்புக்கள்.

★ மது -போதைவஸ்து மீதான கட்டுப்பாடுகள்.

★ ஆதிக்க சிந்தனைக்கெதிரான கலைப்படைப்புக்கள் - ஆற்றுகைகள் - ஊடக விழிப்புணர்வு.

★ சமூக ஊடகங்கள் ஊடாக விழிப்பூட்டல்.

★ அரசியலில் 50 வீதமான பிரதிநிதித்துவத்தை இடையறாது வலியுறுத்துதல்.

★ பெண்கள் தொடர்பான இரண்டாம் பட்ச மனநிலையில் இருந்து விடுவித்தல்.

★ சமூக அசைவியக்கத்தில் ஒவ்வொரு திருப்பத்திலும் பெண் எவ்வாறு நிந்தனை செய்யப்படுகிறாள், சுரண்டப்படுகிறாள், அவமானப்படுத்தப்படுகிறாள் என்பது பற்றிய விழிப்புணர்வு அறிவூட்டல் அவசியம்.

★ பெண்களை இரண்டாம் பட்சமாக கருதும் ஆன்மீக கலாசார மத இலக்கிய நூல்களில் இருந்து அப்பகுதியை நீக்குதல்

★ வன்முறையற்ற சமூகமொன்று பற்றிய கற்பித்தல் விழிப்பூட்டல்.

★ இராணுவ வன்முறையிலும் பெருமளவுக்கு பெண்களே இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

★ பொது வெளியிலும் குடும்பத்திலும் பெண்களின் சுய மரியாதை கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

சட்டங்களில் எத்தகைய பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருந்தாலும் சமூக நடைமுறையில் பெருமளவுக்கு கண்டு கொள்ளப்படுவதில்லை.எனவே பண்பாட்டு மறுமலர்ச்சி நோக்கிய செயற்பாடு அவசியம்.


**வன்முறை -சுரண்டலற்ற சமுதாயம் காண்போம்!!!**




பொன்.வேணு கிருஷ்ணா

**அமெரிக்க பாதுகாப்புச் செயலரான ஜேம்ஸ் மாட்டிஸ் பியோங்கியாங்கிற்கு இரத்தம்உறையச் செய்யும் ஒரு எச்சரிக்கை**

அமெரிக்க பாதுகாப்புச் செயலரான ஜேம்ஸ் மாட்டிஸ் பியோங்கியாங்கிற்கு




இரத்தம்உறையச் செய்யும் ஓர் எச்சரிக்கையை விடுத்தார், அமெரிக்கா அல்லது அதன் கூட்டாளிகளுக்கு எதிராக வட கொரியா அணு ஆயுதங்களைப் பயன்படுத்துமேயானால் அது திறம்பட்ட மற்றும் அதனை மிதமிஞ்சும் ஒரு பதிலடியை கொண்டு எதிர் கொள்ளப்படும் என்று அவர் அறிவித்தார். இந்த வசனமானது, வடகொரியா ஆட்சியையும், அதன் இராணுவ மற்றும் தொழிற்றுறை திறனையும் துச்சமென ஆக்கிவிடத்தக்க மிக உயர்ந்த அமெரிக்க இராணுவ வலிமையை மட்டும் அடிக்கோடிடவில்லை, மற்ற சக்திகளையும் குறிப்பாக சீனாவையும் தவிர்க்கவியலாமல் உள்ளே இழுக்கத்தக்க ஒரு பேரழிவுகரமான போரில் அந்த இராணுவ வலிமையை பயன்படுத்துவதற்கு அமெரிக்கா கொண்டிருக்கும் விருப்பத்தையும் அது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

(US Defence Secretary James Mattis has issued a chilling warning to Pyongyang, declaring that any North Korean use of nuclear weapons against the US or its allies would be met by an "effective and overwhelming response." The statement not only underlines the vastly superior American military might, which could obliterate the North Korea regime and its military and industrial capacity, but also Washington's willingness to use it in a catastrophic war that would inevitably draw in other powers, particularly China.)

**அதி-தேசியவாத வடகொரிய ஆட்சியின் பதிலிறுப்பு முற்றிலும் பிற்போக்குத்தனமானதாய் இருக்கிறது**

அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கு எதேச்சாதிகார, அதி-தேசியவாத வடகொரிய ஆட்சியின் பதிலிறுப்பு முற்றிலும் பிற்போக்குத்தனமானதாய் இருக்கிறது. ஒரு பக்கத்தில் இ வடகொரியா, உலகப் பொருளாதாரத்திற்கான ஒரு மலிவு உழைப்புக் களமாக நாட்டை ஒருங்கிணைக்கும் வகையில் அதன் மீதான பல தசாப்த கால தனிமைப்படுத்தலையும் பொருளாதார முற்றுகையையும் முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க ஏகாதிபத்தியத் திடம் கெஞ்சுகிறது. இன்னொரு பக்கத்தில், அதன் வம்பிழுப்பு வசனங்களும் அணு ஆயுதங்களுக்காக முனைவதும் போரின் அபாயத்தையே அதிகரித்திருப்பதோடு வடகொரியாவில் இருக்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் உலகெங்கிலும் இருக்கின்ற அதன் வர்க்க சகோதர சகோதரிகளுக்கும் இடையில் பிளவுண்டாக்கும் ஓர் ஆப்பைச் செருகுவதாய் இருக்கிறது.

(The response of the autocratic, ultra-nationalist North Korean regime to US threats is utterly reactionary. On the one hand, Pyongyang pleads for US imperialism to end its decades-long isolation and economic blockade so as to integrate the country as a cheap labour platform in the global economy. On the other, its bellicose statements and striving for nuclear arms only heighten the danger of war and drive a wedge between the working class in North Korea and its class brothers and sisters in South Korea, Japan, the United States and around the world.)

**சீன கம்யூனிஸ்ட் கட்சியும் ஒருபக்கத்தில் அமெரிக்காவுடன் ஓர் உடன்பாட்டுக்கு விழைவது மற்றும் மறுபக்கத்தில் ஒரு பெரும் இராணுவ விரிவாக்கத்திற்கும் தனது சொந்த புஜபலத்தைக் காட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் இடையில் ஊசலாடிச் செல்கிறது**

இதேபோல, சீன கம்யூனிஸ்ட் கட்சியும் ஒருபக்கத்தில் அமெரிக்காவுடன் ஓர் உடன்பாட்டுக்கு விழைவது மற் றும் மறுபக்கத்தில் ஒரு பெரும் இரா ணுவ விரிவாக்கத்திற்கும் தனது சொந்த புஜபலத்தைக் காட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் இடையில் ஊசலாடிச் செல்கிறது. CCP தொழிலாள வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை, மாறாக 1978 இற்குப் பிந்தைய முதலாளித்துவ மீட்சியால் விதைக்கப்பட்டிருக்கும் அதி-வலதுசாரி அதிகாரத்தையே பிரதிநிதித்துவம் செய்கிறது.




Chart recreated based on the data from News of the Communist Party of China.


(Likewise, the Chinese Communist Party (CCP) regime veers between seeking a deal with Washington and engaging in a major military expansion and its own muscle-flexing. The CCP does not represent the working class, but the ultra-rich oligarchy that has been spawned by capitalist restoration since 1978.)

**சீனா தென் சீனக் கடலில் இருக்கும் தனது தீவுகள் பலவற்றையும், இராணுவத் தளங்களது சாத்தியம் கொண்டவையாக மாற்றியிருப்பதோடு....**

ஆசியாவில் அமெரிக்காவின் இராணுவப் பெருக்கத்திற்கான பதிலடியாக, சீனா தென் சீனக் கடலில் இருக்கும் தனது தீவுகள் பலவற்றையும், இரா ணுவத் தளங்களது சாத்தியம் கொண்டவையாக மாற்றியிருப்பதோடு அந்தப் பகுதிகளில் பென்டகனின் ஆத்திர மூட்டும் இராணுவ நடவடிக்கைகளுக்கு நிகராய் தனது சொந்த இராணுவ நடவடிக்கைகளை நடத்தத் தொடங்குகிறது. சர்ச்சைக்குரிய சென்காகு/டையோயு தீவுகளைச் சுற்றிலும் ஜப்பானிய இராணுவ மற்றும் கடலோரப் படையுடன் சீனா தொடர்ந்து ஆபத்தான மோதல் போக்குகளில் ஈடுபட்டு வந்திருக்கிறது. தவிரவும், அணுஆயுத வல்லமை கொண்ட வடகொரியா, வட கிழக்கு ஆசியாவில் ஓர் ஆயுதப் போட்டியை தூண்டி விடக் கூடிய சாத்தியத்தைக் குறித்து கவலை நிலவுகின்ற நிலை யிலும், சீனா வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதற்கு எதுவும் செய்ய வில்லை.

(In response to the US military build-up in Asia, China has transformed several of its islets in the South China Sea into potential military bases and matched the Pentagon's provocative military exercises in the area with its own. China continues to engage in dangerous encounters with the Japanese military and coast guard around the disputed Senkaku/Diaoyu islands. Moreover, while concerned about the potential for a nuclear-armed North Korea to trigger an arms race in North East Asia, Beijing has done little to curb Pyongyang.)

இவை அனைத்துமே, ஜனாதிபதி ட்ரம்ப் அமர்த்தப்பட்டதன் மூலம் உலகம் முழுவதும் குறிப்பாக ஆசியாவில் எரியூட்டப்பட்டிருக்கின்ற பெரும் ஆபத்தான மற்றும் கணிக்கமுடியாத சூழ்நிலைக்குள் மேலும் எண்ணெய் வார்ப்பதாக இருக்கிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அமெரிக்க அரசியல் ஸ்தாபகத்தின் பரந்த நெருக்கடியை




பிரதிபலிக்கும் விதமாக ட்ரம்ப்பின் நிர்வாகம் ஏற்கனவே வெளியுறவுக் கொள்கை விடயத்தில் பிளவுபட்டுக் கிடக்கிறது. ட்ரம்ப்பின் பிற்போக்குத்தனமான உள்நாட்டு அரசியலுக்கு அரசியல் எதிர்ப்பு ஆழமடைந்து செல்வதன் மத்தியில், அவரது முதலில் அமெரிக்கா வாய்வீச்சானது சமூகப் பதற்றங்களை ஒரு வெளிப்புறஎதிரியை நோக்கித் திருப்பி விடுவதை இலக்காகக் கொண்டுள்ளது, இது ஒரு சிறு சம்பவமும்கூட ஒருபெரும்பற்றியெரிதலைத் தூண்டிவிடக் கூடிய அபாயத்தை மேலும் தீவிரப்படுத்தும்.

உலகப் போரின் பெருகும் அபாயமானது, 1930களில் போலவே, தேசியரீதியான குரோதங்களுக்கும் இராணுவவாதத்தின் வளர்ச்சிக்கும் எரியூட்டிக் கொண்டிருக்கிற முதலாளித்துவ அமைப்புமுறையின் தீர்க்க முடியாத நெருக்கடியில்தான் அது வேர்கொண்டிருக்கிறது என்பதை அங்கீகரிப்பதன் அடிப்படையில் மட்டுமே எதிர்கொள்ள முடியும். சோஷலிசப் புரட்சி தான் முதலாளித்துவ நெருக்கடி மற்றும் போருக்கான பதில் ஆகும். ஏகாதிபத்திய ஆளும் உயரடுக்குகள் மற்றும் வட கொரியாவிலும் சீனாவிலும் உள்ளது போன்ற பிற்போக்குத்தனமான முதலாளித்துவ ஆட்சிகள் இரண்டுக்குமே எதிராக அணிதிரட்டப்படுகின்ற சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டுமே இந்தப் பணியை முன்னெடுத்து நடத்தும் திறம்படைத்த ஒரேயொரு சக்தியாகும்.



கேள்வி தொடரும்...





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

தமது துணைவியார் அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் வரைந்த விடயங்கள் சிலவற்றை அவர் இந்தத் தொடரில் மேற் கோள்காட்டுகின்றார். அந்தப் பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.






79

-அடேல் பாலசிங்கம்

## ஆயுத உதவிக்கான வேண்டுகோள்

புதுடில்லியில் நடைபெற்ற வெற்றிகரமான பேச்சுக்களின் விளைவாக, இந்திய அமைதிப் படைகளை ஒரு கால அட்டவணைக்கு ஏற்ப, படிப்படியாகத் திருப்பி அழைக்க இந்தியா ஒப்புக் கொண்டது. இந்திய அமைதிப் படைகளைத் திருப்பி அழைக்கும் பணிக்கும் வேகம் கொடுத்து டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் அந்தப் பணியை முடிவுக்குக் கொண்டு வர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட உள்ளன என்று இந்தியா உறுதியளித்தது. எப்படியாயினும், சார்க் மாநாடு கடந்த பின்னரே, இறுதி அமைதிப் படையணி நாடு திரும்புவதாக இருக்கும். செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து இந்திய அமைதிப் படை தனது இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளைக் கைவிடும் என்று புதுடில்லி இணங்கியது.

சிறிலங்கா அணி, அளித்த வாக்குறுதியின்படி, வடக்குக் கிழக்கு மாகாண சபை செவ்வையாக இயங்குவதன் பொருட்டு அதற்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் அலுவல்களுக்கு வேகம் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்று தெரிவித்து, இரண்டு அணியினரும் ஒரு 'பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு' ஒன்றை நிறுவ இணங்கினர். அதில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுச் செயலர், இந்திய அமைதிப் படைத் தளபதி, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஆகியோர் உறுப்பினராய் அமைவர். வடக்கு - கிழக்கின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு இந்தக் குழு பொறுப்பாக இருப்பதோடு, வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து குடிமக்களின் பாதுகாப்புக்கும் காப்புறுதிக்கும் பொறுப்பாகவும் இருக்கும்.

புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டதை ஒட்டி, பிரேமதாசா பெரிதும் மகிழ்ந்தார். அவருடைய இல்லத்தில் இடம்பெற்ற ஒரு பிரத்தியேகச் சந்திப்பின் போது, ராஜீவ் காந்தியுடன் இடம்பெற்ற இராஜதந்திர பலப் பரீட்சைப் போட்டியில் தாம் வெற்றி பெற்றுவிட்டார் எனவும், இந்திய அமைதிப் படையின் கதை முடிந்துவிட்டது எனவும் எம்மிடம் கூறினார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாகத்துக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கி, அதைத் தரம் உயர்த்த சிறிலங்கா வாக்குறுதி வழங்கிய போதிலும், பிரேமதாசா அதற்கென இரகசியத் திட்டம் ஒன்றை வைத்திருந்தார். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலே, தமிழர் தாயகத்தில் இருந்து இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும் என்ற அவர்களுடைய அரசியல் நோக்கம் நிறைவேறுவதால், அவர்களுக்கு இந்த ஏற்பாடு மகிழ்ச்சியையே கொடுத்தது.

இந்தியப் படைகளை ஒரு கால அட்டவணைக்குள் படிப்படியாகத் திருப்பி அனுப்புவதை இந்திய அரசுடன் ஓர் உடன்படிக்கை வடிவில் உறுதிப்படுத்தி, அமைதிப்படை விலகிய பின், தமிழர் தாயகத்தின் அரசியல் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது என்பது பிரேமதாசா எதிர்நோக்கிய பிரச்சினை ஆகியது. போதுமான அளவு அதிகாரப் பகிர்வும், ஒரு காவல்துறை அமைப்பும் வழங்கி, பெருமாளின் மாகாண நிர்வாகத்தைப் பலப்படுத்துவதாக ராஜீவ் காந்திக்குப் பிரேமதாசா உறுதி வழங்கிய போதிலும், விடுதலைப் புலிகள் தங்கள் காட்டு மறைவிடங்களில் இருந்து நகருக்குள் வந்து இந்திய அமைதிப் படையின் நிலைகளில் காலூன்றியமையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆட்சி, காற்றிலே கரைந்து விடும் என்பது பிரேமதாசாவுக்கு நன்கு தெரியும். விடுதலைப் புலிகளின் தீரம், உறுதி மற்றும் தங்கள் இலட்சியம் மட்டில் அவர்களுக்கு இருந்த பற்று ஆகியவற்றை பிரேமதாசா மதித்தார். ஆனால், தமிழரின் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோரிக்கைகளை அவர் வன்மையாக எதிர்த்தார்.

இந்தியப் படைகள் வெளியேறத் தொடங்க, பிரேமதாசவின் சிந்தனைகளும் திட்டங்களும் வெளிப்படையாகத் தெரிந்தன. இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, சிறிலங்காவின் ஒற்றையாட்சி யாப்புக்கு உள்ளேயே அமைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தத் தொடங்கினார். இந்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கிவிட்டமையால், புலிகளும் அரசியல் நீரோட்டத்துக்குள் நடைமுறையில் கலந்துகொள்ள வேண்டிய வேளை முதிர்ந்துவிட்டதாக அவர் கூறினார். விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் மக்களிடையே நிலவிய அமோக ஆதரவுடன், வடக்குக் கிழக்குத் தேர்தல்களில் அவர்கள் மாபெரும் வெற்றி பெறுவது உறுதி. இந்த நிலையில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி ஒன்றை நிறுவி, தேர்தல் ஆணையாளரிடம் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.

## விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சி

விடுதலைப் புலிகளின் இறுதி நோக்கம் பற்றிப் பிரேமதாசா சந்தேகம் கொள்ளத் தொடங்கியிருக்கிறார் என்று, தனிப்பட்ட சந்திப்புகளின் போது, ஹமீது பாலாவிடம் கூறினார். அரசியல் யாப்புக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வைப் புலிகள் நாடமாட்டார்கள் என்றும் தனித் தமிழரசை நிறுவுவதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்றும் சில அமைச்சர்கள் அரசுத் தலைவரை எச்சரிக்கிறார்கள் என ஹமீது தெரிவித்தார். வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் புலிகள் பங்குபற்றி வெற்றி பெறுவார்களானால், உள்நாட்டிலும், அனைத்துலகிலும் புலிகளின் மதிப்பு உயரும் என்று ஹமீது எமக்கு அறிவுரை கூறினார். விடுதலைப் புலிகளின் தலைமை இதற்கு இணங்கினாலல்லாமல், பெருமாள் நிர்வாகத்தைக் கலைத்து, புலிகளிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது அரசுத் தலைவருக்கு மிகக் கடினமாக இருக்கும். அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கும் புலிகளின் தலைமை சம்மதமாக இருப்பதாக ஹமீதுவிடம் பாலா கூறினார்.

தமிழ் மக்களின் உண்மையான ஏகப் பிரதிநிதிகள் தாமே என்று பெரும்பான்மைச் சிங்களவருக்கும் அனைத்துலகுக்கும் நிரூபிப்பதன் பொருட்டு, மாகாண சபைத் தேர்தலில் பங்கெடுக்க புலிகள் சம்மதமாக இருந்தார்கள். அதேநேரம், பிரேமதாசாவின் இறுதி நோக்கம் என்ன என்பது பற்றிப் புலிகளும் சந்தேகம் கொண்டிருக்கிறார்கள் என்று பாலா அங்கு தெரிவித்தார். அதே சமயம் வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்து விடு வாரா, அரசியல் யாப்பின் ஆறாவது திருத் தச் சட்டத்தை நீக்கி ஆயுதப் படைகளைப் பாசறைகளில் முடங்கியிருக்கச் செய்வாரா, அமைதியான முறையில் அதி காரம் புலிகளின் கரங்களுக்கு மாற அவர் இடமளிப்பாரா என்ற பாலாவின் வினாக்களுக்கு, ஹமீது வழங்கிய பதில்கள் சாதகமாகவே அமைந்தன. நாம் மக்களாட்சி அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள ஆயத்தம் என்றால், பிரேமதாசாவை இணங்கச் செய்ய முடியுமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

அரசியற் கட்சி ஒன்றைத் தொடங்குவது தொடர்பாக முல்லைத்தீவில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனைக்கு நாம் சென்றபோது, பிரபாகரனிடமும் ஏனைய தலைவர்களிடமும் பாலா அனுமதி கோரியிருந்தார். எமது தொலைத் தொடர்புச் சாதனம் மூலம் பிரபாகரனுடன் பேசி, கட்சிக்கான பெயருக்கும், கட்சிப் பதவியாளர் பெயர்களுக்கும் பாலா நேரடி அங்கீகாரம் பெற்றார். கட்சிக்கான யாப்பு ஒன்றை வரையும் பணியே மீதமிருந்தது. அரசியல் கட்சி யாப்புக்கள் பற்றித் தாம் முன்னர் ஆய்வு செய்தவற்றை அடிப்படையாக வைத்து, பத்திரத்தை பாலா வரைந்தார். அதைச் செப்பனிட்டு, தட்டச்சிலிட, நான் உதவினேன். அரசியல் கட்சிக்கு, 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்று பெயர் சூட்டப்பட்டது. விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மகேந்திர ராசா (மாத்தையா) கட்சியின் தலைவராகவும் யோகரட்ணம் யோகி செயலதிபராகவும் நியமிக்கப்பட்டனர்.

உண்மையான மக்களாட்சிக் கட்சிக்கான அடித்தளம் ஒன்றுக்கு யாப்பு இடமளித்தது; மக்க ளின் பல்வேறு பிரிவினரும் அதில் பிரதி நிதித்துவம் பெற்றுப் பங்கெடுக்கவும் வகை செய்தது. யாப்பின் பிரதி ஒன்று, பதிவுக்காக, தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கட்சியைப் பதிவு செய்துவிட்டு, அரசுத் தலைவருடன் ஆலோசித்த பின்னர் தயக்கத்தோடு புலிகளின் இலச்சினையை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சின்னமாக அங்கீகரித்தார்.

விடு தலைப் புலிகள் புதிய அரசியற் கட்சி ஒன்றை நிறுவி, அரசியல் பிரதான நீரோட்டத்தில் கலந்து கொள்ளத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தமை பிரேமதாசா வுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத் தது. நாடு முழுவதும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை விவாதிப்ப தற்காகத் தாம் கூட்ட உத்தேசித்திருக் கும் அனைத்துக் கட்சி மாநாட்டில் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர் பெரிதும் கேட்டுக் கொண்டார். பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகப் பகிரங்க அர சியல் அரங்கு ஒன்றிலே விடுதலைப் புலிகளைக் கொண்டு வரும்போது, அமைதிப் பேச்சுகளின் முக்கிய அரசியல் அறுவடையாக இதைக் காட்டக் கூடு மாக இருக்கும் என்பதே அவருடைய எண்ணமாக இருந்தது. மாநாட்டு அங்குரார்ப்பண வைபவத்தில் 'பார்வையாளராக' கலந்துகொள்ளப் புலிகளின் பிரதிநிதிகள் சம்மதித்தார்கள். அனைத்துக் கட்சி மாநாடு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கூடியபோது, இருபத்தாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாக ஏறத்தாழ நூறு பேர் கலந்து கொண்டார்கள்.

பிரேமதாசாவின் அங்குரார்ப்பண உரை, பிரச்சினைத் தீர்வை இலக்காகக் கொண்டு அமைந்தது. கலந்தாலோசனை, சமரசம், கருத்தொற்றுமை ஆகிய தமது மூன்று அணுகுமுறைகளையும் அவர் முன்வைத்தார். முக்கிய விடயமான இனநெருக்கடி தவிர்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் மாநாடு விவாதித்தது. கலந்தாலோசனையோ, சமரசமோ, கருத்தொற்றுமையோ ஏற்படாதமையால் மாநாடு விரைவிலேயே பிசுபிசுத்துப் போயிற்று. ராஜீவ் நிர்வாகத்துக்கும் பிரேமதாசாவுக்கும் இடையே இடம் பெற்ற கூட்டு உடன்பாட்டில் உறுதியளித்தபடி, 1989 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முற்பாகத்தில் இந்திய அமைதிப் படைகளைத் திருப்பி அழைக்கும் பணி தொடங்கியது. மெதுவாகவே அது செயற்பட்டது. படிப்படியாகவும் மாவட்டம் மாவட்டமாகவும் இந்தியப் படைகள் வெளியேற, தமிழ்த் தேசிய இராணுவத்தினர், அந்தப் பாசறைகளில் குடி கொண்டு தங்கள் நிலைகளைப் பலப்படுத்தினர். முதலில் கிழக்கு மாகாண அம்பாறையிலும், மட்டக்களப்பிலும் இருந்து இந்தியப் படைகள் வெளியேறின. கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய இராணுவத்தின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்துவது சாத்தியம் என்பதால், திகிலடைந்து குழம்பிப் போன பெருமாள் நிர்வாகம், பெரும் படை திரட்டும் முயற்சியில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டது.

வீதிகளில், வீடுகளில், பள்ளிகளில் நுழைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினர், திடகாத்திர உடலுடைய இளவயது ஆண்கள் அனைவரையும் பலவந்தமாகப் பிடித்துச் சென்றனர். தமது இராணுவப் பிரிவுக்கு ஆளணி மூலம் ஊட்டம் வழங்கி, ஈடாட்டம் கண்டு நொருங்கும் நிலையில் இருந்த தமது ஆட்சியைத் தக்க வைப்பதே இந்த ஆட்சேர்ப்பின் நோக்கமாக இருந்தது. தான் அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டு இருக்க வேண்டும் என்ற பகீரதப் பிரயத்தன முயற்சியில் பயிற்சியோ, போர் அனுபவமோ இல்லாத பெருந்தொகையினரைப் பலி கொடுக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். செய்த இந்த ஆட்சேர்ப்பு முயற்சி, தமிழ் மக்களிடையே பெருமாள் மட்டில் மனக் கொதிப்பை ஏற்படுத்தியது.

(தொடரும்...)

காலைக்கதிர்



# ஈழத் தமிழர்களை இதயபூர்வமாக நேசித்த மூச்சு அடங்கியது...!

**ஆஸ்திரேலியாவிலிருந்து ஈழத்தமிழர் உரிமைக்காகப் பாடுபட்ட உண்மையான ஓர் ஆத்மா ட்ரெவர்**

பா.தெய்வீகன்
(ஆஸ்திரேலியா)

ஈழத் தமிழர்களையும் அவர்களது போராட்டத்தையும் இதயபூர்வமாக நேசித்த Trevor Grant காலமாகிவிட்டார். நுரையீரலின் உள்ளேயும் நெஞ்சுத் தசைகளின் மீதும் படர்ந்து படிப்படியாக உயிரைக் கொல்லும் Mesotheli-oma புற்று நோயால் கடந்த இரண்டு வருடங்களாகப் பாதிக்கப்பட்டிருந்த ட்ரெவர் நேற்று முன்தினம் காலமானார்.

ட்ரெவர் போல் தமிழர் ஆதரவு செயற்பாடுகளை ஓர்மத்துடன் முன்னெடுத்த ஆஸ்திரேலிய குடிமகன் ஒருவரை ஆஸ்திரேலியா இதுவரை கண்டதும் இல்லை. இனிமேல் காணப்போவதுமில்லை. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈழத் தமிழர் விவகாரத்தில் தனது ஆழமான கரிசனையை வெளிப்படுத்தி - ஒரு தீவிர செயற்பாட்டாளராக - களத்தில் இறங்கிய ட்ரெவர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் அவரது ஆற்றலுக்கும் அப்பாற்பட்டவை.

அடிப்படையில் விளையாட்டு விமர்சனக் கட்டுரைகளை எழுதும் ஆஸ்திரேலியாவின் பிரபல ஊடகவியலாளர்தான் ட்ரெவர். Mainstream ஊடகங்கள் எனப்படும் ஆஸ்திரேலிய முன்னணி செய்தியறைகளில் ஒரு பிரபலமான புள்ளி. Trevor Grant என்ற பெயருடன் வருகின்ற கட்டுரைகளுக்கு ஆஸ்திரேலியர்களின் மத்தியில் தனி மதிப்பும் அதேவேளை எதிர்கொள்வோருக்கு பயமும் இருந்தது. விமர்சனக் கட்டுரைகளை அவர் எழுதும் பாணி குறித்து இன்றுவரைக்கும் புகழ்ந்து பேசுபவர்களும் உள்ளனர். ஆஸ்திரேலிய ஊடகத்துறை வரலாற்றில் மறக்கமுடியாத நபர் என்று கூறலாம்.

அப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட ஒருவர் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போர்முடிந்தகையோடு ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஈழத் தமிழர்களின் செயற்பாட்டு நிகழ்வுகளுக்கு வருகைதரத் தொடங்கினார். அவரை உள்ளீர்த்துக் கொண்டதில் ஹாரன் மயில்வாகனத்தின் பங்கு அளப்பெரியது. ஆஸ்திரேலிய மக்களின் மனங்களை அறிந்து அவர்களுடன் அவர்களது மொழியிலேயே பேசக் கூடிய - எழுதக் கூடிய - ட்ரெவரின் வருகை ஈழத்தமிழர்களுக்கு அந்த காலப் பகுதியில் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.



அவரது செயற்பாடுகள் பேச்சும் எழுத்தும் என்று தனித்திராது களத்தில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் - பேரணிகள் என்று குரல்கொடுக்கும் மெய்யான முன்னெடுப்புக்களாக அமைந்தன. போர் முடிந்த காலப் பகுதியில் தமது உறவுகளுக்கு ஏற்பட்ட பெருங்கொடுமையை வெளிக்கொண்டுவருவதற்குக் கைகொடுப்பார் யார் என்று தவித்துக் கிடந்த தமிழர்களுக்கு ட்ரெவரின் வருகை பெரும் தெம்பாக அமைந்தது.

ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவான அவரது நடவடிக்கைகள் பல்வேறு கிளைகளாகப் படர்ந்தன. இலங்கைப் பொருள்களுக்கான புறக்கணிப்புப் போராட்டம் என்றாலும் அவர் முன்னுக்கு நின்றார். போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவான போராட்டம் என்றாலும் அது குறித்த கட்டுரையொன்றை காரசாரமாக எழுதி ஏதாவது ஓர் ஊடகத்துக்கு அனுப்பிவிட்டு பேரணியின் முன்பாக வந்து பதாகையோடு நிற்பார். இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிரான போராட்டம் என்றாலும் BOYCOTT SRI-LANKA CRICKET TEAM என்ற ரீ- சேர்ட்டுடன் முன்னுக்கு வந்து நிற்பார்.

ஆஸ்திரேலியா முழுவதும் அறியப்பட்ட விளையாட்டு விமர்சகரான ட்ரெவர் சிறிலங்கா கிரிக்கெட் அணியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் முன்னின்று பேசுவதா என்று ஆஸ்திரேலியாவிலுள்ள இலங்கை தூதரகம் அந்த காலப் பகுதியில் blush ஆகிவிட்டார்கள். உடனே, தங்களுக்கே உரிய பாணியில் ஒரு பாணி போடும் நபரை வைத்து ட்ரெவரை தொலைபேசியில் அழைத்து தாங்களே இலங்கைக்கு அவரை கூட்டிச் சென்று அங்குள்ள நிலைமைகளைக் காண்பிப்பதாகக் கூறினார்கள். மஹிந்த இராச்சியத்தில் தேனும் பாலும் பொழிவதை வந்து பார்க்கும்படி கேட்டார்கள். அழைப்பெடுத்த நபருக்கு பதிலளித்த ட்ரெவர் ''நிச்சயம் வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் நடத்தும் சித்திரவதை முகாம்களையும் எனக்கு காட்ட வேண்டும். நீங்கள் இன்னமும் மக்களை அடைத்துவைத்திருக்கும் முகாம்களையும் எனக்குக் காட்டவேண்டும். போர்க் குற்றங்களை செய்துவிட்டு ஒளித்து வைத்திருக்கும் தடயங்களையும் எனக்கு காட்ட வேண்டும். ஓம் என்றால் சொல்லுங்கள். நாளையே வருகிறேன்'' என்றார். போன் பண்ணிய பெருமகன் ''You are a white tiger'' -என்று விட்டு 'கட்' பண்ணிவிட்டார்.

எதற்குமே ட்ரெவர் அஞ்சவில்லை. தான் வரிந்துகட்டிக் கொண்ட ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை யாருக்காகவும் சமரசம் செய்யவில்லை.

''போர்க்குற்றம் புரிந்த இலங்கை அரசை அம்பலம் செய்வேன்'' என்று கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற காலப் பகுதியிலேயே ''தமிழ் ஏதிலிகள் பேரவை'' என்ற அமைப்பை ஆரம்பித்து, அப்போது - 2010 காலப் பகுதியில் - அள்ளுகொள்ளையாக படகுகளில் ஆஸ்திரேலியாவுக்கு வந்த ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தார். அந்தப் பிரச்சினையின் ஊடாக இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் இன அழிப்பை எழுதத் தொடங்கினார்.

ஏதிலிகள் பேரவையிலிருந்து அவர் மேற்கொண்ட பணிகள் பரந்துபட்டவை. அக்காலப் பகுதியில்தான் Sri Lanka's Secrets & How the Rajapaksa regime ge-ts away with Murder-'' என்ற புத்தகத்தையும் எழுதி, அந்த புத்தகத்துடன் வெளிநாடுகளுக்கும் சென்று பலரைச் சந்தித்து தமிழர்களுக்காக பேசினார்.

சுருக்கமாகச் சொன்னால், கடந்த ஏழு வருடங்களில் ஆஸ்திரேலியாவிலிருந்து ஈழத் தமிழர் உரிமைக்காகப் பாடுபட்ட உண்மையான ஓர் ஆத்மா ட்ரெவர்.

தமிழர்களின் போராட்டத்துக்கும் அவர்களுக்கான விடிவொன்றுக்குமான வேட்கையில் இதய சுத்தியுடன் காணப்பட்டார். தமிழர்களுக்கு விசுவாசமாகப் பணியாற்றினார். எது செய்தாலும் இந்தச் சமூகத்துடன் இணைந்து செய்யவேண்டும். அவர்களுடன் இணைந்து பயணிப்பதுதான் சரியான பாதையாக இருக்கமுடியும் என்றும் உறுதியாக நம்பினார். பாவம். அவரை இயக்கிய அமைப்புக்கள் அவருக்குள்ள பிரம்மாண்டமான முகவரியை சரியாக பயன்படுத்துவதற்கு பதிலாக, அவரை தீவிரமான கருத்துக்களுடன் அலைகின்ற ஓர் ஆவேசப் பேர்வழிபோல வெளிக்காட்டுவதிலேயே குறியாக இருந்தன. தங்களைப் போலவே அவரும் We want Tamil Eelam என்று ரீ - சேர்ட் அணிந்துவந்து தமிழீழத் தேசிய கொடியுடன் வீதியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும் என்று விரும்பினார்களே தவிர, அவரை வேறோரு தளத்தில் ஆக்கபூர்வமான பணிகளுக்கான ஒரு நபராக முன்னிலைப்படுத்த விரும்பவில்லை.

ஒரு காலகட்டத்தில் ட்ரெவரது பெயருக்காக அவரது ஆக்கங்களை அவ்வப்போது பிரசுரித்த ஆஸ்திரேலிய ஊடகங்கள் கூட, அவரது தீவிர நிலைப்பாட்டை ஒருவித பிறழ்வுத்தன்மை போலவே கண்டு கடந்துபோனார்கள். அந்த பாராமுகம் அவருக்கு மாத்திரமல்ல, அவருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த தமிழர்களுக்கும் சேர்த்துத்தான் அமைந்தது. காலத்துக் காலம் போராட்ட வடிவங்களை மாற்றியமைக்க வேண்டும் என்பதிலும் ட்ரெவரை போன்ற அங்கீகரிக்கப்பட்ட மனிதர்களை வேறு பயன்பாட்டுத் தளத்தில் செயற்படுபவர்களோடு இணைத்து பொது வெற்றியை காணவேண்டும் என்பதிலும் யாருக்கும் பெருந்தன்மை இருக்கவில்லை. ட்ரவரை யார் சொந்தம் கொண்டாடுவது என்பதில்தான் அதிகம் சிரத்தையிருந்தது.

ஆனால், ட்ரெவர் தான் சார்ந்த அனைவருக்கும் நேர்மையாக பணி செய்தார். அரசியல் நிகழ்வுகளுக்கு அப்பால் தமிழர்களின் கலாசார நிகழ்வுகள், திருமண - மரண நிகழ்வுகள் ஆகியவற்றுக்குக்கூட வந்து தனது உண்மையான அன்பை வெளிப்படுத்தினார்.

தமிழ் இசை நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து தனக்கு சற்றும் விளங்காத ''அஸ்கு லஸ்கு ஏமோ ஏமோ'' பாட்டுகளுக்குக் கூட முன்வரிசையிலிருந்து தலையாட்டி ரசித்து பாடியவர்களுக்கு கைகொடுத்து பாராட்டினார். தமிழ் சமூகத்திடமிருந்து எப்போதும் ஓர் அரவணைப்பை எதிர்பார்த்தார். தமிழ்ச் சமூகத்துக்கு இன்னும் இன்னும் பெரும்பணியை செய்ய வேண்டும் என்ற தீராத தாகத்துடன் தன் சொந்த செலவிலேயே எத்தனையோ காரியங்களை செய்தார். கடைசிவரை அதற்காக பேசினார் எழுதினார். இறுதியில் எல்லோரைப்போல சற்றும் விரும்பாத மரணத்திடம் அடைக்கலமானார்.

தமிழ்ச் சமூகத்துக்கு தனது முழுமையான பணியை செய்யமுடியவில்லையே என்ற ஏக்கத்துடன்தான் அவரது உயிர் பிரிந்திருக்கும். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்!

★

# எமது சந்ததியினரிடையே அருகிவருகின்றன கலைகள்

**தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் நாகேஸ்வரன் கவலை**

இந்த நவீன யுகத்தில் எமது சந்ததியினரிடையே கலைகள் மீதானநாட்டம் குறைவடைந்து வருகிறது.

தென்மராட்சியைச் சேர்ந்த நாடகக் கலைஞரும் சமூக சேவகருமான குணராசாவின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சி இலக்கிய அணித்தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று கலைஞரும், கலைகள் மீது மனிதன் கொண்ட பற்றும் அருகிச் செல்கின்றது. இதற்குக் காரணம் இன்றைய சினிமா, சீரியல் போன்ற அந்நியப் படைப்புகள். சினிமாவும் சீரியலும் குடும்ப உறவுக்குள் விரிசலை ஏற்படுத்தக் கூடிய விஷத்தன்மை கொண்டவை. இன்று சீரியலை (தொடர் நாடகம்) பாட்டி தொடங்கி ஐந்து வயது பேர்த்திவரை தினமும் விரும்பிப் பார்க்கின்றனர். சீரியலில் வரும் காட்சிகளில் ஊறி விடுகின்றனர். அதனைப் பார்த்து கண்ணீரும் வடிக்கின்றனர். இந்த சீரியல் மீது கொண்ட ஈர்ப்பு இன்று எத்தனையோ குடும்பங்களில் கணவன் -மனைவி உறவுக்குள் விரிசலை ஏற்படுத்தி விவாகரத்தை உண்டு பண்ணுகின்றது.

இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பட்டி மண்டபம், கலை நிகழ்வுகளுக்குச் செல்ல அனுமதிப்பதில்லை. மாறாக தமது பிள்ளைகள் நவீன கருவிகளான தொலைக்காட்சி, தொலைபேசி போன்றவற்றில் தமது கவனத்தைச் செலுத்த பெற்றோர்களே இடமளித்து வருகின்றமை வேதனைக்குரிய விடயம்.

புதிய வரவுகள் மனிதனை ஆக்கப் பாதையில் இருந்து அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன என்பதே உண்மை. இரு தசாப்த காலங்களுக்கு முன்னர் கிழமைக்கு கிழமை சனசமூக நிலையங்கள், மன்றங்களில் கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை வழக்கம். ஆனால், இன்று வருடத்துக்கு ஒரு கலை நிகழ்வைக் கூட அரங்கேற்றுவது கடினமான விடயமாகி விட்டது. அந்தளவுக்கு மக்கள் மனதில் கலைகள் மீதான நாட்டம் இல்லாமல் போய் விட்டது.


இந்த நிலைமை மாற வேண்டும். இளம் சமுதாயத்தினிடம் கலைகள் மீதான ஆர்வத்தை வளர்க்க ஆசிரியர், பெற்றோர்களாகிய நாங்கள் முன்வர வேண்டும். இன்றைய சீரியல்களும் சினிமாக்களும் பச்சிளங் குழந்தைகளைக் கூட கெடுத்து, கொல்லுதல் போன்ற கதாபாத்திரங்களுக்கு உட்படுத்தி வருகின்றன. இந்த சம்பவங்களைப் பார்க்கும் போது குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் வக்கிரத் தன்மை, குரூர குணம் என்பன தானாகவே விதைக்கப்படுகின்றன.

அத்துடன் இன்றைய மரண நிகழ்வுகள், கேளிக்கை கொண்டாட்டங்களாக மாறி வருவது மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான எமது பண்பாடு, கலாசாரத்துக்கு மீறிய சம்பவங்களே ஆண்டவனின் பொறுமையைச் சோதித்து இயற்கைச் சீற்றங்களை உண்டு பண்ணுகின்றன என்பதில் எந்த ஐயமுமில்லை.- என்றார்.(ஐ-21.)

# ஆளும் கட்சியாகவேதான் செயற்படுகிறது கூட்டமைப்பு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு



வவுனியா, மார்ச் 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் எதிர்க்கட்சியாக செயற்படவில்லை. மாறாக ஆளும் கட்சியாகவே செயற்பட்டு வருகின்றது. கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் சம்பந்தன் ஐயா விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதனை விடுதலைப்புலிகளின் கீழ் உள்ள அமைப்பாக அவர் பார்த்தார்.

- வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அப்போதைய அரசியல் சூழ்நிலைகளைக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி உருவாக்கப்பட்ட அமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நான் கூட்டமைப்பில் இருக்கின்றேன். கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது சம்பந்தன் ஐயா அதனை உருவாக்க விருப்பம் கொண்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு கீழ் உள்ள ஓர் அமைப்பாகவே அதனைப் பார்த்தார். ஆனால் பரராஜசிங்கம், ஆனந்தசங்கரி ஆகியோர் மிகவும் விருப்பம் கொண்டிருந்தனர்.

எனினும் சம்பந்தரிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறப்பட்டே அவர் அழைத்து வரப்பட்டார். ஆனால், இன்று மிகவும் மோசமாக சர்வாதிகாரத் தன்மையுடன் கூட்டமைப்பில் உள்ள சில கட்சிகள் செயற்படுகின்றன.

மஹிந்தவுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் இருக்கின்றது. சிறிதரனை எமது கட்சியின் ஊடாக நாமே களம் இறக்கினோம். சிவமோகனை நாமே களம் இறக்கினோம். ஆனால் இன்று நடந்துள்ளது என்ன?

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் ஒருவர் போட்டியிட வேண்டுமானால் ஏதாவது ஒரு கட்சியின் ஊடாகவே போட்டியிட வேண்டிய நிலை உள்ளது. அதற்காகத்தான் நாம் யாப்பு ஒன்றை உருவாக்கிப் பதிவு செய்யுமாறு கோருகின்றோம். எவரும் நேரடியாக கூட்டமைப்பின் ஊடாகத் தனது தேர்தல் களத்தை நிர்ணயிக்கலாம். ஆனால் அது நடைபெறாமல் உள்ளது.

மனோகணேசன் தலைமையிலான கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் தமிழ் முற்போக்கு கூட்டணியை உருவாக்கினார்கள். இன்று ஒரு வருடத்தினுள் அவர்கள் யாப்பை தயாரித்து பதிவு செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். ஆனால் 16 வருடங்களாகியும், கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமல் உள்ளது. அது மாத்திரமன்றி கூட்டமைப்புக்கு கணக்கறிக்கை கூட இல்லாமல் இருக்கின்றது. பல மில்லியன் ரூபா தேர்தலுக்காகவும் புனர்வாழ்வுக்காகவும் கூட்டமைப்புக்கு வந்துள்ளது. அதற்கான முறையான கணக்கறிக்கைகள் இல்லை. கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே நான் இருக்கின்றேன். ஆனால் எனக்கும் கணக்குகள் காட்டப்படவில்லை.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக செயற்படவில்லை. ஆளும் கட்சியாகவே செயற்பட்டு வருகின்றது. 1960 ஆம் ஆண்டு பெர்னாண்டோ என்பவர் சுயேச்சையாக போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி சபாநாயகரானார். ஆனால் அவர் சபாநாயகராகத் தொடர்ந்தும் இருக்கின்றமைக்கு அவர் ஆளும் கட்சிக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக சுதந்திரக் கட்சியில் இணைந்தார். அவ்வாறெனில் எப்படி கூட்டமைப்புக்குள் உள்ளவர்கள் அதற்கு நிகரான பதவிகளை வகித்து வருகின்றனர். எனவே, மக்கள் விழிப்படைந்து முடிவெடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.- என்றார்.

(ஐ-100)







காந்தி மாஸ்டர் என்று அழைக்கப்படும் பொன்னம்பலம் கந்தையா மறைந்து 31 ஆம் நாள் நினைவு நாள் நிகழ்வையொட்டி 'சுவாமி சிவானந்தாவின் உபதேசங்கள்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சில்வெஸ்ரார் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், முதல் பிரதியை கொடையாளர் ஏ. கந்தசாமி வெளியிட்டு வைக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள் அதனைப் பெற்றுக் கொண்டார். (ஐ)

## சிறைச்சாலை பஸ் மீது தாக்குதல் நடந்த இடத்துக்கு விசாரணைக் குழு

கொழும்பு, மார்ச் 08

களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழு இன்று சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் செல்லவுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி காலை களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது இனந்தெரியாத சிலர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் ஏழு பேர் உயிரிழந்தனர். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சிறைச்சாலைகள் அமைச்சால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடி, ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## கர்ப்பிணியைக் கொடுமைப்படுத்திய சாரதியின் அனுமதிப்பத்திரம் நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 08

தனியார் பேருந்தில் பயணித்த கர்ப்பிணிப் பெண்ணைக் கொடுமைப்படுத்திய சாரதியின் அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தென்னிலங்கையில், மீரிகம என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

சுகவீனமடைந்த மேற்படி கர்ப் பிணிப்பெண் தனது தாயாருடன் தனியார் பேருந்து ஒன்றில் ஏறி வைத்தியசாலைக்குச் சென்றார். இதன்போது அவர் பேருந்தில் வாந்தி எடுத்துள்ளார். அப்போது பேருந்தின் நடத்துநராகப் பணியாற்றிய அதன் உரிமையாளர் மீரிகம நகரத்தில் வைத்து பேருந்தைச் சுத்தப்படுத்துமாறு அந்தப் பெண்ணைக் கட்டாயப்படுத்தினார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவர், தனது தாயாரின் உதவியுடன் பேருந்தைச் சுத்தப்படுத்தினார். அதனால் அவர் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

அந்தச் சம்பவம் தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து பேருந்துச் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான உயர்மட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அந்தப் பேருந்துச் சாரதியின் அனுமதிப் பத்திரத்தை அரசாங்கம் ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தம் செய்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

## தொடர்கிறது சீனி பதுக்கல்!

கொழும்பு, மார்ச் 08

சீனி பதுக்கல் நடவடிக்கை பெரியளவில் இடம்பெற்றுள்ள நிலையில், சீனி ஒரு கிலோவின் விலை 110 ரூபாவிலிருந்து 125 ரூபாவாக அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்தது.

விற்பனை நிலையங்களில் தேடிப் பார்த்தமைக்கு அமைய, சீனியின் விலை அதிகரிப்புக்கு பிரதான காரணமாக, சீனி ஒரு கிலோகிராமுக்கான மொத்த விற்பனை விலை, 93 - 95 ரூபாவில் இருந்து 105 ரூபாவாக அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது. (ஐ)

## பெரியளவில் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது இலங்கை

### மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது என்று கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, மார்ச் 08

இலங்கையின் சமகால அரசு பெரியளவில் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதாக மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுகையிருப்பு குறைவடைந்த நிலையில் எதிர்பார்த்த முதலீடு கிடைக்காமையால் இந்த நிதி நெருக்கடி அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் வெளிநாட்டு கையிருப்பாக 4.53 பில்லியன் அமெரிக்க டொலர் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் போது அந்தத் தொகை 2.60 பில்லியன் டொலர் வரை குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக 2015ஆம் ஆண்டு டொலருடன் ஒப்பிடும் போது ரூபாயின் பெறுமதி 133.37 ரூபாயாக காணப்பட்டுள்ளது. 2017ஆம் பெப்ரவரி மாதம் இறுதியில் 153.31 ரூபாவாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் காலங்களில் டொலருக்கு செலுத்துவதற்கு உள்ள கடன் மற்றும் வட்டி பெரியளவில் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரூபா வீழ்ச்சியடையவதால் பொருள்கள் மற்றும் சேவைகளின் கட்டணம் மேலும் அதிகரிக்கப்படும் என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

ரூபாவின் பெறுமதி வலுவடையவில்லை என்றால் டொலருக்கு செலுத்தப்படும் பெறுமதி 170 வரையில் அதிகரிக்கும் எனவும் ரூபா மேலும் வீழ்ச்சியடையும் எனவும் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்பார்த்த வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீடு கிடைக்காமையால் டொலரின் கையிருப்பு மேலும் வீழ்ச்சியடைய கூடும் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# காலவரையறையற்ற போராட்டத்தில் குதித்தனர் இராமேஸ்வரம் மீனவர்!

## தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து

சென்னை, மார்ச் 08

தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரை சுட்டுக்கொன்ற இலங்கைக் கடற்படையின் நடவடிக்கையைக் கண்டித்தும் விரைவில் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் கோரி இராமேஸ்வரம், தங்கச்சி மடம் பகுதியில் மீனவர்கள் காலவரையற்ற போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், மீனவரை சுட்டுக்கொன்ற கடற்படையினரைக் கைது செய்யும்வரை இந்தப் போராட்டம் தொடரும். வாடிவாசல் மற்றும் நெடுவாசல் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்த இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது போராட்டத்துக்கும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரியுள்ளனர்.



இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர் பிரிட்ஜோ உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 400 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

நடுக்கடலில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயத்தில், அந்தப் பகுதியில் ரோந்து மேற்கொண்ட இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர்கள், அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர் என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

மேலும் அந்த மீனவர்கள் இந்தியக் கடல் எல்லை பகுதியில் தான் இருந்தனர். அவர்கள் உடைமைகளை அங்கேயே விட்டுவிட்டு தப்பிக்க முயன்ற போதும், அவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் தான் பிரிட்ஜோ என்கிற அந்த மீனவ இளைஞர் குண்டடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று மீனவ அமைப்பினர் கூறினர்.

இதேவேளை, இலங்கைக்கடற்படையினரின் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள தமிழக மீன் வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார், இது போன்ற சம்பவங்கள் தொடராமல் தடுக்கத் தேவையான அழுத்தத்தை மத்திய அரசுக்கு கொடுப்போம் என்று உறுதியளித்தார்.

### இணையமைச்சர் ராதாகிருஷ்ணன் கண்டனம்

மேலும் தமிழகத்தை சேர் ந்த மத்திய இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், இருநாட்டு மீனவர்களுக்கு இடையேயான பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டு வரும் சூழலில், இலங்கை அரசின் இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவிக்கிறார் எனக் கூறினார்.

### ஸ்டாலின் குற்றச்சாட்டு


இதேவேளை, மீனவர்களுக்கு இடையேயான பேச்சால் மட்டும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாது என்று தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், தி.மு.கவின் செயல் தலைவருமான மு.க.ஸ்டாலின் கூறியுள் ளார்.

மேலும் தமிழக மீனவர்கள் விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து அலட்சியம் காட்டுகின்றன என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இலங்கை அரசுக்கு இந்தியா பகிரங்க எச்சரிக்கை விடுக்க வேண்டும். சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர் குடும்பத்துக்கு உடனடியாக 25 லட்சம் ரூபா நிதியளித்து, படுகாயமடைந்த மீனவர்களுக்கும் உயர்தர சிகிச்சை அளித்து காப்பாற்ற அ.தி.மு.க. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.' என்று அவர் கூறியுள்ளார்.

### மீனவர்கள் கண்டனம்

தமிழகத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும் இந்த விவகாரத்தில் கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் காலவரையற்ற வேலை நிறுத்தமும் அறிவித்து, போராட் டங்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். (எ)



தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை கண்டித்து தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பாக 4 இளைஞர்கள் தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

### சுட்டுக்கொல்லப்பட்ட மீனவக் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூ. நிவாரணம்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு முதல்வர் பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டுள்ள மீனவரின் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.


இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொல்லப்பட்ட மீனவர் பிரிட்ஜோகுடும்பத்திற்கு 5 லட்சம் ரூபா நிவாரணமும், காயமடைந்த சரணுக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். மேலும் காயமடைந்த மீனவருக்கு தரமான சிகிச்சை அளிக்கவும் மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.-என்றுள்ளது. (எ)

## மீனவரின் உடலைப் பெற மறுத்து உறவினர்கள் சத்தியாக்கிரகப் போர்!

சென்னை, மார்ச் 08

இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த மீனவரின் உடலைப் பெறுவதற்கு மறுப்புத் தெரிவித்து தங்கச்சிமடம் மீனவர் சங்கத்தினரும் உறவினர்களும் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 21 வயதான பிரிட்ஜோ என்ற மீனவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றும் 24 வயதான சரண் என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேரில் உறுதிமொழி வழங்கும் வரை உடலை பெற்றுக் கொள்ளமாட்டோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்ய வேண்டும். சென்னை யில் உள்ள இலங்கைத் தூதரை வெளியேற்ற வேண்டும்.

இந்திய மத் திய அரசு இலங்கை அரசுடன் பேசி சரியான முடிவு எடுத்தால் மட்டுமே உடலை வாங்குவோம் என்று தெரிவித்துள்ளனர். (எ)

# கருச்சிதைவு செய்யப்பட்டு வீசப்பட்ட 19 பெண் சிசுக்கள் குப்பை மேட்டில்!

## மராட்டிய மாநிலத்தில் கொடூரம்

மராட்டிய மாநிலத்தில் கருச்சிதைவு செய்யப்பட்டு 19 பெண் சிசுக்களின் சடலங்கள் பிளாஸ்ரிக்கவரில் சுற்றப்பட்டு குப்பை மேட்டில் வீசப்பட்ட கொடூரம் நிகழ்ந்துள்ளது.

மராட்டிய மாநிலம் சங்லி மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் இளம்பெண், அங்குள்ள மருத்துவமனையில் மர்மமான முறையில் மரணமடைந்தார். இதுதொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸார் அந்த மருத்துவமனைக்குச் சென்றனர். தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில், மரணமான இளம் பெண்ணுக்கு கருச்சிதைவு ஏற்பட்டமையையும், வயிற்றிலிருந்த பெண் சிசு அருகிலுள்ள சாக்கடையில் வீசப்பட்டதையும் பொலிஸார் கண்டறிந்தனர்.

மேலும், கருச்சிதைவு செய் யப்பட்ட 19 பெண் சிசுக்கள் ஒரு பிளாஸ்ரிக் பையில் அடைக்கப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டமை தெரியவந்தது. மாய்ஷால் என்ற பகுதியில் பைகளில் கட்டப்பட்ட சிசுக்கள் கண் டெடுக்கப்பட்டன. சிசுக்கள் கண்டெடுக்கப்பட்ட கழிவு நீர் கால்வாய் கருச்சிதைவு முறைப்பாட்டுக்குள்ளான மருத்துவமனைக்குப் பின்னால் அமைந்துள்ளது.



இந்த முறைப்பாட்டின் பேரில் மருத்துவர் பாபாசாஹேப் கித்ராபூர் மற்றும் இறந்துபோன பெண்ணின் கணவர் பிரவீன் ஜமாடே ஆகிய இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கருச்சிதைவு குற்றச்சாட்டுக்குள்ளான மருத்துவர் பாபா சாஹேப் கித்ராபூர் தற்போது தலைமறைவாக இருக்கிறார். அவர் ஹோமியோபதி மருத்துவர் என்று தெரியவருகின்றது.

மேலும் அந்தக் கால்வாயில்தான் கருச்சிதைவு செய்யப்பட்ட பெண்சிசுக்களை பிளாஸ்ரிக் பைகளில் கட்டி வீசுவதை பாபா சாஹேப் வழக்கமாகக் கொண்டிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது. (எ)

## ரஷ்யக்கிளர்ச்சியாளருக்கு உதவுவதை நிறுத்துமாறு உக்ரேய்ன் கோரிக்கை

ரஷ்ய கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று உக்ரேய்ன் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கியநாடுகள் அமைப்பின் சர்வதேச நீதிமன்றில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா சர்வதேச சட்டங்களை மீறிச் செயற்படுகின்றது. ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கு நிதி மற்றும் ஆயுத உதவிகளை ரஷ்யா வழங்கி வருகின்றது என்று குற்றம் சுமத்தி ரஷ்யாவுக்கு எதிராக ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் உக்ரேய்ன் மனுத் தாக்கல் செய்துள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா முற்று முழுதாக நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இந்தியாவில் பயங்கரவாதக் குழுக்கள்; தென்னாசியாவில் தாக்குதல் நடத்தலாம்

## எச்சரிக்கிறது அமெரிக்கா; தங்கள் நாட்டு பயணிகளுக்கு அறிவுரையும்!



வொஷிங்டன், மார்ச் 08

இந்தியாவில் பயங்கரவாத இயக்கங்கள் செயற்பட்டுவருகின்றன. எனவே, அவை தெற்கு ஆசியாவில் எவ்வேளையிலும் தாக்குதல்களை நடத்தலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்கு ஆசியாவுக்குச் செல்லும் அமெரிக்கர்களுக்கு பயண அறிவுரை வழங்கி உள்ள அந்த நாட்டு அரசு இந்தியாவில் பயங்கரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு தடைவிதிப்பு தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் உத்தரவில் மாற்றம் தொடர்பான மறு அறிவிப்பு வெளியாகிய நிலையில் இந்த நகர்வு ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத இயக்கங்கள் நிறுவப்பட்டு உள்ளன, பழங்குடியின பிரிவுகள் மற்றும் பிற பயங்கரவாத இயக்கங்களால் பாகிஸ்தானில் அமெரிக்கர்களுக்கு ஆபத்து எழுந்துள்ளது என்று உலகம் முழுவதும் உள்ள அமெரிக்கர்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில் அமெரிக்க வெளியுறவுத் துறை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எனவே பயங்கரவாதக் குழுக்கள் இந்தியாவிலும் செயற்பட்டு வருகின்றன என்று இந்த அவசரச் செய்தி கோடிட்டுக் காட்டுகிறது. பயங்கரவாதிகள் பலவிதமான தாக்குதலில் ஈடுபட்டு உள்ளனர். மற்றும் பங்களாதேஷில் உள்ள கல்வி நிறுவனங்களும் இலக்காக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கையில் பயங்கரவாத இயக்கத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை.

எனினும், தெற்கு ஆசியாவில் செயற்பட்டு வரும் பயங்கரவாதக் குழுக்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கலாம் என்று வெளியுறவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கர்கள் செல்வதையும் தவிர்க்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)

## மலேஷியாவிலுள்ள வடகொரியர்கள் தாய்நாட்டுக்குச் செல்லத் தடை

கோலாலம்பூர், மார்ச் 08

மலேஷியாவில் இருக்கும் வட கொரியா நாட்டினர் அங்கிருந்து வெளியேற மலேஷிய அரசு நேற்று தடை விதித்துள்ளது. அத்துடன் கோலாலம்பூரில் உள்ள வட கொரியா நாட்டு தூதரகத்தை தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளது.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் வட கொரிய ஜனாதிபதியின் சகோதரர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, மலேஷியாவுக்கான வட கொரியத் தூதரை உடனடியாக தங்கள் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது.

இதற்குப் பதிலடியாக தங்கள் நாட்டில் இருந்த மலேசியத் தூதரை வட கொரியா வெளியேற்றியது.

கிம் ஜாங் நாம் படுகொலை தொடர்பாக வட கொரிய நாட்டைச் சேர்ந்த விமானி ஒருவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்த மலேஷிய அரசு அவரை உடனடியாகத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வட கொரியாவிடம் கோரிக்கை விடுத்தது.

இந்தநிலையில், வட கொரியாவில் இருக்கும் மலேஷிய நாட்டினர் யாரும் அங்கிருந்து வெளியேறக் கூடாது என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அதிரடியாக உத்தரவிட்டார். மலேசியாவில் இருக்கும் தங்கள் நாட்டினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த நடவடிக்கை அவசியம் என்று வட கொரியா தெரிவித்தது.

இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். எங்கள் நாட்டு மக்களை உடனடியாக தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மலேஷியா கோரிக்கை விடுத்தது.

இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க வட கொரியா மறுத்துவிட்ட நிலையில் தங்கள் நாட்டில் தங்கியுள்ள வட கொரிய நாட்டினரை தாய்நாட்டுக்குச் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று மலேஷிய அரசும் பதிலடி கொடுத்துள்ளது. இதற்கான அறிவிப்பை மலேஷிய துணை பிரதமர் அஹமத் சாஹித் ஹமிதி வெளியிட்டார். (எ)

தென்கொரியாவில் அமெரிக்கா அமைக்கும்

## ஏவுகணை எதிர்ப்புக் கவன்: எதிர்ப்புத் தெரிவிக்கிறது சீனா

*பீஜிங், மார்ச் 08*

*வட கொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக தென் கொரியாவில் அமெரிக்கா அமைக்கவுள்ள அதி உயரப் பகுதி பாதுகாப்பு அமைப்பான ஏவுகணை எதிர்ப்புக் கவனுக்கு (Ternilal High Altitude Area Defence (THAAD) system) சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது.*

*ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை தாக்கி அழிப்பதற்காக வட கொரியா ஒத்திகை பார்த் துள்ள நிலையில் வட கொரியாவின் சவாலை எதிர்கொள்ளும் வகையில் ஏவு கணைத் தடுப்பு கவன் அமைக்கும் பணியில் அமெரிக்க இராணுவம் தீவிரம் காட்டி வருகிறது.*

*அமெரிக்காவின் இந்த முயற்சியை தென் கொரியாவின் அண்டை நாடான சீனா, ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வருகிறது. இந்த கவன் அமைக்கப்பட்டால் கவனில் இருந்து வெளிப்படும் ராடார் கதிர்வீச்சால் சீனாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு பாதிக்கப்படும் என்பதால் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாக சீனா குறிப்பிட்டு வந்தது.*

*இந்தக் கவன்களை அமைப்பதற்கான பாகங்களும், மூலப் பொருள்களும் அமெரிக்காவில் இருந்து தென்கொரியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று சமீபத்தில் செய்திகள் வெளியாகின.*

*இந்த நிலையில் இதற்கான முயற்சியை தற் போது அமெரிக்க இராணுவம் தீவிரமாகச் செயற்படுத்த முனைப்புக் காட்டி வரும் நிலையில் அமெரிக்காவின் முடிவை தீவிரமாக எதிர்ப் போம் என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது. (எ)*

## மோசடி குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் இஸ்ரேல் பிரதமரிடம் தொடர்ந்து விசாரணை

மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகூவிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். 4 ஆவது தடவையாக இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தகர் ஒருவரிடமிருந்து பரிசு பெற்றுக் கொண்டார் என்றும் ஊடகங்களைத் தமக்குப் பக்கச்சார்பான முறையில் இயக்கினார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமருக்கு எதிரான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 2009 ஆம் ஆண்டு முதல் நெத்தன் யாகூ பதவி வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சர்ச்சையை ஏற்படுத்திய அமெ. அதிகாரியின் கருத்து

அமெரிக்காவின் அரச உயர் அதிகாரி ஒருவர், அகதிகளை அடிமைகளுடன் ஒப்பிட்டுப் பேசிய பேச்சு கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வீடமைப்பு மற்றும் நகரமயமாக்கல் அமைச்சின் செயலாளரான பென் கார்சனே இவ்வாறு பேசி கடும் சர்ச்சைக்கு உள்ளானார்.

அந்த அமைச்சின் செயலாளராகப் பதவியேற்ற முதல் நாளான நேற்று தனது அலுவலக ஊழியர்கள் முன்னிலை உரையாற்றினார்.

இதன் போது அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த அகதிகள் தங்களது குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்துக்காக கடுமையான உழைப்பை நல்கி வருகிறார்கள்.

இதுபோன்ற கனவுகளுடன் வருபவர்களின் தேசமாக அமெரிக்கா எப்போதும் விளங்குகிறது.

அதேநேரம், இன்னும் சில அகதிகள், 'அடிமைகள்' என்னும் கப்பலின் அடித்தளத்தில் பயணித்து அமெரிக்கா வந்தடைந்துள்ளனர். அவர்கள் மற்றவர்களை விடக் [illegible]டுமையாகவும் அதி[illegible]வும் உழைக்கின்றனர். எனினும் அவர்களால் மிகச் சொற்பமான வருமானத்தையே ஈட்ட முடிகிறது. இந்தக் கூற்றின் அடிப்படையில், அமெரிக்கா[illegible]வில் அகதிகளாக அடைக்கலம் புகுந்த அனைவருமே அடிமைகள் என்ற கப்பலில் பயணித்தவர்கள். அதில் அடித்தட்[illegible] அகதிகளே கடுமைய[illegible] உழைத்தும் குறைந்த[illegible] வருமானத்தையே ஈட்டுகிறார்கள். என்றார். (எ)

# அவசரமாக இன்று கூடுகிறது ஐ.நா. பாதுகாப்புச் சபை

## வடகொரியாவின் அத்துமீறலை அடுத்து

வட கொரியா மீது மேலும் புதிய தடைகளை விதிக்கவும் வட கொரியாவின் தொடரும் அத்துமீறல் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை இன்று அவசரமாகக் கூடுகிறது


உலகநாடுகளின் தடை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்துக்குள்ளாகி வரும் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் நவீன ரக ஏவுகணைகளையும் அவ்வப்போது தொடர்ந்து பரிசோதித்து வருகிறார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மீண்டும் நான்கு ஏவுகணைகளை வட கொரியா பரிசோதித்தது. அடுத்தடுத்து விண்ணை நோக்கி சீறிப் பாய்ந்த இந்த ஏவுகணைகளில் மூன்று ஜப்பான் கடல் என்றழைக்கப்படும் கிழக்கு கடல் பகுதியில் விழுந்தன என்று தென் கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதற்கு ஐ.நா. சபை மற்றும் ஜப்பான், அமெரிக்கா போன்றவை கண்டனம் தெரிவித்திருந்தன.

ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தின்மீது தாக்குதல் நடத்தப் போவதாக வட கொரியா மிரட்டியுள்ளது. இந்த நிலையில் இந்த நெருக்கடியைச் சமாளிக்கவும் வட கொரியா மீது மேலும் புதிய தடைகளை விதிக்கவும் வட கொரியாவின் தொடரும் அத்துமீறல் தொடர்பாக விவாதிக்கவும், அந்நாட்டுக்கு எதிராக மேலும் சில புதிய தடைகள் விதிப்பது தொடர்பாக ஆலோசிக்கவும் ஐ.நா. பாதுகாப்புச் சபை இன்று அவசரமாகக் கூடுகிறது. (எ)



# பிரிமியர் லீக் உதைபந்தாட்டம்; எவர்ட்டனை வீழ்த்தியது ஸ்பர்ஸ்!



லண்டன், மார்ச் 08

ஐரோப்பிய உதைபந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் பிரிமியர் லீக் தொடரில் தீர்மானம் மிக்க போட்டிகள் சில அண்மையில் இடம் பெற்றுள்ளன.

அந்தப் போட்டி முடிவுகள் வருமாறு:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முடிந்த போட்டிகளில், அபார வெற்றிகளை சுவீகரித்து இருக்கும் டொட்டேன் ஹம் ஹொட்ஸ்பர் கழகம் மற்றும் மன்செஸ்டர் சிட்டி கழகம் ஆகியவை ஆங்கில பிரிமியர் லீக் தொடரின், சம்பியன் தொடரின் வெற்றியாளர் யார் எனத் தீர்மானிக்கும் பந்தயத்தில் இன்னும் இருக்கின்றன.

தொடரின் முன்னணி அணிகளான, மன்செஸ்டர் யுனைட்டட் உதைபந்தாட்டக் கழகம் மற்றும் ஆர்சனல் கழகம் ஆகியவை கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற போட்டியில் பின்னடைவைச் சந்தித்தன.

இதன் காரணத்தால், ஹர்ரிக்கேன் பெற்றுக் கொண்ட இரட்டை கோல்களுடன் 3-2 என எவர்ட்டன் கழகத்தை வீழ்த்தி தொடரில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டாம் இடத்தைப் பெற்று ஸ்பர்ஸ் கழகம் முன்னேறியுள்ளது.

அத்துடன், சன்லேண்ட் கழகத்துக்கு எதிரான போட்டியொன்றில், சேர்ஜியோ அகுய்ரோ மற்றும் லேரொய் சேன் ஆகியோரின் கோல்கள் உடன் 2-0 என வெற்றி பெற்ற மன்செஸ்டர் சிட்டி கழகம் தொடரில், புள்ளிகள் அடிப்படையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

# தூக்கமில்லாமல் தவித்தாராம் தலைவர் அஞ்சலோ மத்யூஸ்!



கொழும்பு, மார்ச் 08

இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் 11 நாள்கள் தூக்கமில் லாமல் தவித்துள்ளார்.

கடந்த 11 தினங்களுக்கு முன்னர் அஞ்சலோ மத்யூஸுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இதன் காரணமாகவே அவர் தூக்கம் இல்லாமல் தவித்துள்ளார்.

இந்தத் தகவலை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மத் யூஸ் தெரிவிக்கையில்,

குழந்தை நன்றாக உள்ளது. இன்னும் பெயர் வைப்பது தொடர்பாக எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை. கூடிய விரைவில் வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அக்குழந்தையின் பெயர் ஜேக்யூஸ்சாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ஏனெனில், மத்யூஸ் தென் ஆபிரிக்க வீரர் ஜேக்யூஸ் காலிசின் தீவிர ரசிகர் என்பதால், அந்தப் பெயர் வைப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

# இலங்கை அணி பிரகாசிக்கும்!

## ரங்கன நம்பிக்கை



காலி, மார்ச் 08

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி பிரகாசிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அணித் தலைவர் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷுக்கும் இலங் கைக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமாகி உள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரங்கன ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போட்டியை முன்னிட்டு நாம் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டோம். சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற போட்டிகளில் திமுத் கருணாரட்ண, தினேஷ் சந்திமால் ஆகியோர் திறமையை வெளிப்படுத்தியமை மகிழ்ச்சி தருகின்றது.- என்றும் தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ணத்தை வெல்வதற்கான சிறந்த அணியை உருவாக்குவேன்!

## இலங்கை அணியின் புதிய முகாமையாளரான அசங்க குருசிங்க தெரிவிப்பு





கொழும்பு, மார்ச் 08

2019 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத்தை வெல்வதற்கான சிறந்த அணியை உருவாக்குவேன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளரான அசங்க குருசிங்க தெரிவித்துள்ளார்.

அசங்க குருசிங்க, இலங்கைக்கு 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர்களில் முக்கியமானவர். இவர் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் 3ஆம் இலக்க வீரராகக் களமிறங்கி அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அந்தப் போட்டியில் எதிரணியை அதிரவைத்து தனக்கெனத் தனியொரு முத்திரை பதித்தவர்.

இந்நிலையில், அசங்க குருசிங்க 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காகப் பணியாற்றவுள்ளார்.

இதற்கமைய, இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக அசங்க குருசிங்கவை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது.

தனது பதவியினைப் பொறுப்பேற்பதற்காக நாடு திரும்பிய அசங்க குருசிங்க, விசேட ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டார்.

அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இலங்கை அணிக்கு பங்களிப்புச் செய்ய வாய்ப்பு கிடைத்தமையையிட்டு பெருமை அடைகிறேன்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், எனது பாடசாலை நண்பருமான அரவிந்த டி சில்வாவுடன் நான் பாடசாலை கிரிக்கெட்டில் அறிமுகமானேன்.

அதன் பிறகு இளம் வயதில் தேசிய அணியில் இடம்பிடித்தேன். உண்மையில் 1996 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக லாகூர் கடாபி விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில் அரைச்சதம் குவித்ததுடன் ஆட்டநாயகன் அரவிந்த சில்வாவுடன் மூன்றாவது விக்கெட்டில் இணைந்து துடுப்பெடுத்தாடி இலங்கை அணி சம்பியனாவதற்கு வழிவகுத்திருந்தமை இன்றைக்கும் என்னை பிரமிக்க வைத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால என்னை கடந்த 5 மாதங்களுக்கு முன் ஆஸ்திரேலியாவில் சந்தித்தபோது இப்பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்திருந்தார். எனவே இன்று நான் அவருடைய அழைப்பை ஏற்று மீண்டும் இலங்கைக்கு வருகை தந்துள்ளேன்.

குறிப்பாக முற்றிலும் இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணியை சிறப்பான முறையில் கட்டியெழுப்பி 2019 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கான சிறந்த அணியொன்றை உருவாக்குவதே எனது இலக்காகும் என்றும் தெரிவித்துள்ளார்.


அசங்க, இலங்கை அணிக்காக 41 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7 சதங்களுடன் 2452 ஓட்டங்களைக் குவித்துள்ளார். மேலும், 147 ஒரு நாள் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆஸிக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் இந்தியா வெற்றி: 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் அஸ்வின்!

பெங்களூர், மார்ச் 08

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஸ்வின் அற்புதமாகப் பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.



பெங்களூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 71.2 ஓவர்களில் 189 ஓட்டங்களில் சுருண்டது. ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 122.4 ஓவர்களில் 279 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 87 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 72 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 213 ஓட்டங்களை எடுத்தது. இதன்மூலம் ஒட்டு மொத்தமாக 126 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது. புஜாரா 173 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 79, அஜிங்க்ய ரஹானே 105 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 40 ஓட்டங்களை எடுத்து களத்தில் இருந்தார்கள்.

நேற்று ஆட்டம் தொடங்கியபோது, புஜாராவும் ரஹானேவும் நிதானமாக விளையாடினார்கள். கருண் நாயரின் முச்சதத்தால் அதிக அழுத்தத்துக்கு ஆளாகியிருக்கும் ரஹானே, இந்த டெஸ்ட் போட்டியில் தனது திறமையை மீண்டும் நிரூபித்தார். அவர் 128 பந்துகளில் அரை சதம் எடுத்தார். ஆஸ்திரேலிய அணி புதிய பந்தைத் தேர்வு செய்த பிறகு ஆட்டத்தின் போக்கே மாறிப்போனது. ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர், சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமாக உள்ள ஆடுகளத்தில் தங்களது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினர். எதிர்பாராதவிதமாக நடுவர் 'நொட் அவுட்' கொடுத்தும் டிஆர்எஸ் முறையில் 52 ஓட்டங்களுடன் ஸ்டார்க்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் ரஹானே. இதிலிருந்து சரிவு தொடங்க ஆரம்பித்தது.

அடுத்த பந்திலேயே முச்சத நாயகன் கருண் நாயர், கிளீன் போல்ட் ஆகியோர் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் சோகத்துடன் வெளியேறினர். அடுத்த பந்தில் அவுட் ஆகாமல் ஸ்டார்க் கின் ஹாட்ரிக் முயற்சியைத் தடுத்தார் சஹா.

அடுத்த ஓவரில் இந்திய ரசிகர்களுக்கு மேலும் அதிர்ச்சி தரும் விதமாக ஹேஸில்வுட்டின் பந்துவீச்சில் 92 ஓட்டங்களுடன் வெளியேறினார் புஜாரா அடுத்ததாக வந்த அஸ்வின் 4 ஓட்டங்களில் ஹேஸில்வுட் பந்துவீச்சில் 'கிளீன்போல்ட்' ஆகி வெளியேறினார்.

இதன்பிறகு சாஹா வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முயற்சி செய்தார். ஸ்டார்க்கின் பந்துவீச்சில் ஒரு சிக்ஸர் அடித்தார். ஆனால் அடுத்த ஓவரில் அதேபோல அதிரடியாக ஆட முயன்ற உமேஷ் யாதவ் 1ஓட்டத்தில் ஹேஸில்வுட் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

200 ஓட்டங்கள் முன்னிலை இல்லாமல் வெற்றி வாய்ப்பு கடினம் என்கிற நிலைமையில் கடகடவென விக்கெட்டுக்கள் விழுந்ததால் இந்திய அணி ரசிகர்கள் மிகவும் சோகமானார்கள்.

கடைசி விக்கெட்டுக்கு சஹாவும் இஷாந்த் சர்மாவும் 9.4 ஓவர்கள் தாக்குப்பிடித்து ஆடினார்கள். இறுதியில் ஓ'கீபே பந்துவீச்சில் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் இஷாந்த் சர்மா. சஹா கடைசிவரை போராடி 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணி தனது 2 ஆவது இன்னிங்ஸில் 97.1 ஓவர்களில் 274 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தது. ஆஸ்திரேலியத் தரப்பில் ஹேஸில்வுட் 6 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதனால் ஆஸ்திரேலிய அணிக்கு 188 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

குறைந்த ஓட்டங்களே இலக்காக உள்ளதால் இந்திய அணியினர் ஆக்ரோஷமாகப் பந்துவீசினர். இந்திய அணியின் பந்துவீச்சுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கும் ரென்ஷாவின் விக்கெட்டை வீழ்த்தினார் இஷாந்த் சர்மா. அதிரடியாக ஆட முயன்ற வோர்னரை இந்த இன்னிங்ஸிலும் 17 ஓட்டங்களில் வீழ்த்தினார் அஸ்வின். முக்கிய தலைகள் பெவிலியன் திரும்பியதால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஆஸ்திரேலிய அணி தனது 2 ஆவது இன்னிங்ஸில் 35.4 ஓவர்களில் 112 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்தியத் தரப்பில் அஸ்வின் அற்புதமாகப் பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் ஸ்டார்க் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இந்தியாவில் மட்டும் 200 விக்கெட்டுகளை வீழ்த்தி அஸ்வின் சாதனை படைத்துள்ளார்.

75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என சமன் செய்துள்ளது. இரு அணிகளும் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி, ராஞ்சியில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

## பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்: குசல் சதம்; வலுவான நிலையில் இலங்கை!

### 4 விக்கெட் இழப்புக்கு 321 ஓட்டங்கள்

காலி, மார்ச் 08

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் குசல் மெண்டிஸின் சதத்துடன் இலங்கை அணி வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலங்கை அணி சார்பில் அணித்தலைவர் ஹேரத், உபுல் தரங்க, திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், தினேஸ் சந்திமால், நிரோஷன் டிக்வெல்ல, அசேல குணரத்ன, டில்ருவான் பெரேரா, சுராங்க லக்மால், லஹிரு குமார மற்றும் லக்‌ஷன் சந்தகன் ஆகியோர் விளையாடுகின்றனர்.

பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்பிஹுர் ரஹீம், தமிம் இக்பால், சௌமிய சர்க்கார், மொனிமுல் ஹக், மஹமதுல்லா, சகிப் அல் ஹசன், லிடோன் டையாஷ், மெஹிதி அசன் மிராஷ், தஷ்கின் அஹமட், முஷ்தபிஹுர் ரஹ்மான், சுபாஷிஷ் ரோய் ஆகியோர் களமிறங்கவுள்ளனர்.

நேற்றைய முதலாவது நாள் ஆட்ட முடிவில் 88 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 321 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது. குசல் மெண்டிஸ் 166 ஓட்டங்களுடனும், என்.டிக்வெல்ல 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். திமுத் கருணாரத்ன 30, அசேல குணரத்ன 85 ஓட்டங்களைப் பெற்றனர்.

## ஏவுகணை...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏவுகணைத் தாக்குதலில் விமானப்படை விங்கொமாண்டர் ஒருவர் உட்பட அந்த நான்கு விமானப் படையினருக்கும் மரணத்தை விளைவித்தார் எனக் குற்றம் சுமத்தி சட்டமா அதிபர் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையில் இந்தச் சம்பவம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட எதிரியின் வாக்கு மூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயேச்சையாக, சுதந்திரமாக வழங்கப்படவில்லை என 17.01.2017 ஆம் திகதி கட்டளை வழங்கிய மேல் நீதிமன்றம், இந்த வழக்கைத்தொடர்ந்து நடத்துவதா, இல்லையா என்பதை மன்றுக்குத் தெரிவிக்குமாறு அரச சட்டவாதிக்குப் பணிப்புரை விடுத்திருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கில் மேலதிக விசாரணை எதுவும் செய்யவில்லை எனவும் வழக்குத் தொடுநர்தரப்பு வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாகவும் அரச சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிரியை விடுதலை செய்த நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:-

இந்த வழக்கின் எதிரி, 2011 ஜுன் மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என மன்றில் சாட்சியம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், தடுப்புக் காவல் உத்தரவு எதுவும் சான்றாகச் சமர்ப்பிக்கப்படவில்லை. தடுப்புக் காவல் உத்தரவு யாரால் பிறப்பிக்கப்பட்டது என்பதும் மன்றில் முன்வைக்கப்படவில்லை.

எனவே எதிரி, சட்ட ரீதியான தடுப்புக் காவலில் இருந்தாரா அல்லது சட்ட முரணான தடுப்புக் காவலில் இருந்தாரா என்பதும் மன்றில் முன்வைக்கப்படவில்லை.

எனவே, மேற்படி காரணங்களின் அடிப்படையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஏற்கனவே மன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. வழக்கில் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் எண்பிக்க வேண்டியது வழக்குத்தொடுநரின் கடமையாகும்.

ஆனால், இந்த வழக்கில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில், எதிரிக்கு எதிராக வேறு சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படாதபடியால் எதிரியை இந்த நீதிமன்றம் விடுதலை செய்கின்றது. - என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். (உ)

## கொக்குவில் இந்துக் கல்லூரி வழமைக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 07

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வழமைபோல் நடைபெற்று வருகின்றன.

எனவே, பெற்றோர்கள் இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்து மாணவர்களின் வரவினை உறுதிசெய்து கொள்ளவும். - இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் கோரியுள்ளார். (உ)

டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி

★ பைவர் கிளாஸ் மோல்ட்
★ பைவர் கிளாஸ் உற்பத்தி
★ றபர் மோல்ட் மற்றும்
★ சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

தொ.பே.: 021 222 8680
0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இக்காணிகளில் பெரும்பான்மையானவை பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பொது மக்களிடம் இருந்து எடுக்கப்பட்டவையாகும். உதாரணமாக, ஆட்டிலறித் தாக்குதலிலிருந்து பலாலி விமானத் தளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் வலிகாமம் வடக்கில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில்இருந்த மக்கள் சுமார் 25 வருடங்களுக்கு முன்னதாக வெளியேற்றப்பட்டார்கள்.

ஆனால், 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரும் ஒரு சில பகுதிகள் மாத்திரமே பொது மக்களின் மீள் குடியேற்றத்துக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன. ஏனைய பெரும் பகுதிக் காணிகளின் உரிமையாளர்கள் நலன்புரி நிலையங்களிலும் தங்களின் உறவினர் வீடுகளிலும் வாடிக் கொண்டிருக்க, படையினர் இந்தக் காணிகளை ஆக்கிரமித்து அவற்றில் உல்லாச விடுதிகளை நடத்துவது உட்படப் பயிர்ச்செய்கை மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

வன்னியிலும் கூட இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் பாதுகாப்புப் படையினர் வசமுள்ளன. அண்மையில் கேப்பாபிலவில் விமானப் படையினரால்சில காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் மேலும் பல காணிகள் இராணுவத்தினர் வசமுள்ளன.

தங்களை மீண்டும் இந்தக் காணிகளில் குடியமர அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் எனக்கோரி இந்த காணிகளுக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

இது 2015 ஆம் ஆண்டு ஜனவரி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியாகும்.

மக்கள் இரண்டு வருடம் பொறுமை காத்ததோடு, இப்போது நியாயபூர்வமாக, அரசாங்கம் தனது வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில் இந்தக் காணிகளைவிடுவிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுகின்றனர்.

யுத்தத்துக்கு முன்னர் பொது மக்கள் வாழ்ந்த, தற்போது பாதுகாப்புப் படையினர் வசமுள்ள இக்காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்குஎவ்விதத் தாமதமுமின்றி மீளக் கையளிப்பதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். – என்று உள்ளது. (உ)

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொகுக்கப்பட்டு ஓர் அறிக்கையாக முன் வைக்கப்பட்ட நிலையில், நேற்றைய கூட்டத்தில் அது விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் பெரும்பாலும் அனைத்துக் கட்சிகள் மற்றும் அனைத்துத் தரப்புகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். சுமார் ஒரு மணி நேரம் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறவிருந்தமையால் நேற்றைய கூட்டம் இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்துடன் தான் அரசமைப்பு சபைக்கு (நாடாளுமன்றத்துக்கு) சமர்ப்பிக்கப் போகும் இடைக்கால அறிக்கையில் இடம்பெறக் கூடிய அதிகாரப் பகிர்வு விடயங்களை வழிகாட்டல் குழு பெரும்பாலும் இறுதி செய்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. – இப்படி அந்தப் பிரமுகர் மேலும் தகவல் வெளியிட்டார்.

இடைக்கால அறிக்கை தயாரானதும் அதைப் பரிசீலிப்பதற்காக முழு நாடாளுமன்றமும் அரசமைப்புச் சபையாக கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மறுத்த – மூன்று எம்.பிக்களின் இடத்துக்குப்போலிக்கையொப்பமிடப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய பொய்யான ஆவணத்தைஅனுப்பியமைபாரதூரமான செயல்.

– இப்படி மேலும் தெரிவித்திருக்கின்றார் சுமந்திரன். ரெலோ செயலாளர் நாயகத்தின் குற்றச்சாட்டுப்பத்திரம்தொடர்பில்அவர் மேலும்தெரிவித்தவைவருமாறு:–

தமிழ் மக்களின் ஆணை, அவர்களின்அபிலாஷைசம்பந்தப்பட்ட விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்கும்நாம்சென்றுவிடவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைதொடர்பாக 2015 ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தமிழ்க் கூட்டமைப்பும் வரவேற்றிருக்கின்றது. அந்த நிலைப்பாட்டில்மாற்றம்எதுவும்இல்லை. அதை ஒட்டியே – அதை மீறாமலேயே – எங்கள் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதற்கு முரண்பாடான எந்த நிலைப்பாட்டு மாற்றத்தையும் நாம் எடுக்கவில்லை. அப்படி நாம் எடுத்து, கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு மாறாகச் செயற்படுகின்றோம் என்று கூறுவது முற்றிலும் தவறு.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுக்காமல் கூட்டமைப்பின் பெயரால் மிகப் பாரதூரமானஒருநிலைப்பாட்டுமாற்றத்தை எடுத்திருக்கிறோம் என்பது தவறானது.

சர்வதேசபங்களிப்புடனான கலப்புநீதிமன்றப்பொறிமுறை விசாரணை விடயத்தில் ஜனாதிபதியின் மறுப்பும், பிரதமரின் கருத்தும் முற்றிலும் தவறானவை. – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு மாறானவை– என்பதை நேற்றும் (திங்கட்கிழமை) சிங்கள பி.பி.ஸிக்கு பட்டவர்த்தனமாக எடுத்துரைத்திருக்கின்றேன். அது சிங்கள மக்களைச் சென்றடைந்திருக்கின்றது.

இலங்கைக்கு மேலதிகமாக இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று நாம் கோரவில்லை. இலங்கைதான் அதைக் கோருகின்றது.

அதைக்கொடுக்காவிட்டால், ஏற்கனவே நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை தப்பிப்போய்விடும்.

இலங்கைக்கு கொடுத்த கால அவகாசம் முடிந்துவிட்டது, ஆகவே இலங்கையைத் தண்டிக்கப்போகின்றோம்என்றுமுடிவெடுத்து நகரும் சர்வதேச சூழலமைவு அங்கு இல்லை.

ஆகவே, இலங்கை கோரும் கால அவகாசத்தைக்கொடுத்து, ஐ.நா. கண்காணிப்புடனோ அல்லது பிற வழிகள் மூலமோ, ஏற்கனவே இலங்கை உறுதியளித்த விடயங்களில் இருந்து தப்பிப் போகாமல் இருப்பதற்கான மார்க்கத்தை முன்னெடுங்கள் என்று நாம் கோரினோம். அதன் அர்த்தம் நாம் இலங்கை அரசுக்காகக் குரல் எழுப்புகின்றோம் என்பதல்ல. மாறாக, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானக் கடப்பாடுகளில் இருந்து தப்பிப் போகாத வகையில் இலங்கையை மடக்குவதுதான்.

நாம்வடக்கு,கிழக்கு இணைப்புக்குஎதிராகச்செயற்படவில்லை. மாறாக, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு யதார்த்த பூர்வமாக என்ன செய்ய வேண்டும் என்றுதான் கூறியிருக்கின்றோம். கிழக்கில் கணிசமான அளவு எண்ணிக்கையில் உள்ள முஸ்லிம்களின் மனதை வெல்வதன் மூலமே இணைப்பைச்சாத்தியமாக்கமுடியும் என்பதுதான் யதார்த்தம். ஆகவே உண்மையில் 'இணைப்பு' என்ற பெயரில் பிரிப்பைஏற்படுத்தும்அலங்கோலங்களை அரங்கேற்றாமல், தந்திரோபாயமாக இணைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளைத்தான் – நடைமுறைச் சாத்தியமான வழியில் – நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

கூட்டமைப்பை வழிநடத்துவோர் யாரும் அரசியல் பேரத்திற்கோ, சந்தர்ப்பவாத திரைமறைவு உடன்பாடுகளுக்கோ பலியாகவில்லை. மாறாக, எமது செயற்பாடுகள் வெளிப்படையானவையாக, பகிரங்கமானவையாக உள்ளன. நாம் வெளிப்படையாகவேபேசி, வெளிப்படையாகவே அறிவித்துச் செயற்படுகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்துக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்த கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேரின் அரசியல் விவேகத்தைக் கேலி செய்யும் விதத்தில் நான்கருத்துவெளியிட்டிருக்கின்றேன் என்ற ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நான் யாரையும் கேலி செய்யவில்லை. ஜெனீவாவுக்குக் கடிதம் அனுப்பிய எம்.பிக்களுக்கு சர்வதேச நடைமுறைப் போக்குகள், செயற்பாடுகள்பற்றியநடைமுறை அறிவு உண்டா என்றே கேள்வி எழுப்பியிருந்தேன். அது தொடர்பான எனது விளக்கத்துடன் அந்தக் கேள்வியைப் பரிசீலித்தால், அந்தக் கேள்வியில்உள்ள நியாயங்கள்புரியும்.

பதினொரு எம்.பிக்கள் என்று கூறுகின்றார்கள். அந்தப் பதினொருபேரில்மூவர் என்னுடன் தொடர்பு கொண்டனர். தாங்கள் அந்த மகஜரில் கையொப்பமிட மறுத்துவிட்டனர் என்றும், ஆனால், அந்த மகஜர் தங்களின்பெயர் மற்றும் ஒப்பத்துடன் ஐ.நாவுக்குஅனுப்பப்பட்டுள்ளது போலும் என்றும் கூறுகின்றார்கள்.

அப்படியாயின், அது பெரிய மோசடி. பாரதூரமான விடயம். அந்தக் கடிதத்தை அல்லது மகஜரை அப்படி மோசடி செய்து அனுப்பியவர் யார்? அந்த மகஜரில் ஒப்பமிட்ட ஏனையவர்களுக்காவது அப்படிமோசடிசெய்தவர் யார் என்பது தெரிந்திருக்கும். இதுபற்றி விரைவில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவில் விசாரித்து அறியப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மூன்று எம்.பிக்களின் பெயரே இவ்வாறு மோசடி செய்யப்பட்டிருப்பதாக இப்போது தகவல் வந்துள்ளது. அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளனர். இன்னும் எத்தனை எம்.பிக்கள்தங்களின் பெயர்களும் மோசடி செய்யப்பட்டன என்று கூறப் போகின்றார்களோ தெரியாது. அதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா. கூட்டமைப்பின் அடுத்த மூத்த தலைவர் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை அண்ணன். கூட்டமைப்பின் சார்பில் சர்வதேசவிடயங்களைக்கையாள்பவன்நான். எங்கள்மூவருக்கும் தெரியாமலேயேஎம்.பிக்களின் பெயரில் இந்தமகஜர்அனுப்பப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் கூட்டமைப்பின்ஐக்கியத்தை–ஒற்றுமையை– சீர்குலைப்பவர்கள்யார்?

நடப்பை எல்லாம் மாவை அண்ணனும் அறிவார்.

–இப்படி சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (உ)

## வேலையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றபோதிலும், இதுவரை அரச அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் பாராமுகமாக இருக்கின்றனர் என அவர்கள் கவலைவெளியிட்டுள்ளனர்.

இதனால், அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் முகமாக அவர்கள் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக இதர சமூகத்தினர், வர்த்தகர்கள் உட்பட சகல தரப்பினரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளனர். (ம–70)

## ஏவுகணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி நேற்று யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

இந்தச்சம்பவம் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதப்பகுதியில் நடைபெற்றது. விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் விமானப்படை அதிகாரி விங்கமாண்டர்டி ரோன் டெஸ் மன்சுதந்த சிவப்புள்ளே, விமானி அந்து நெத்திசிந்தக்க பிரச்சன்னடி சொய்சா, விமான சார்ஜன் மற்றும் விமானப்படை கோப்பரல் வெத்தகலகேடொன் அஜித்துார ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13 ஆம் திகதி இந்தச் சம்பவம் தொடர்பாக சிவசுப்பிரமணியம் தில்லைராஜ் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச்சந்தேகநபர்கொம்படிப் பகுதியில் நடத்தப்பட்ட விமான

(17ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டிருப்பவை வருமாறு:–

அரசியல்தீர்வைப்பொறுத்த மட்டில்,வடக்கு,கிழக்குஇணைப்பு என்பது உடனடிச் சாத்தியம் இல்லை என்றும், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கப்படுவதை நியாயப்படுத்தியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்றஉறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்துக்களை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணும் விடயத்தைப் பொறுத்தமட்டில், வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைந்த தமிழ் மொழி வழி மாநிலத்துக்கு பூரண அதிகாரங்களுடன்கூடிய சுயாட்சிவேண்டும்என்பதுதான் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கையாகும்.

இந்த அடிப்படைநிலைப்பாட்டில் அரசியல் சமரசத்திற்கோ அல்லது சந்தர்ப்பவாத விட்டுக்கொடுப்பிற்கோ இடமில்லை. இந்த நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், அதற்கு முன்பு நிகழ்ந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் தமிழ்மக்கள்முன்,வைக்கப்பட்டு அவர்களின்மகத்தான ஆணை பெறப்பட்டிருக்கின்றது.

ஆயினும், இரண்டு பெரும் சிங்களபேரினவாதக்கட்சிகளையும் உள்ளடக்கியிருக்கும் இன்றைய ஸ்ரீலங்கா அரசாங்கம், இலங்கைத்தீவு ஒரே நாடு என்ற வரையறைக்குள், ஒற்றையாட்சி முறையை அகற்றி, தமிழ் மக்களுக்கு அவர்களின்மரபுவழித் தாயகத்தில் சுயாட்சியை வழங்குவதற்குத் தயாராக இல்லை.

அது மட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தின்போர்க்குற்றவிசாரணை தொடர்பிலான தீர்மானத்தின் பிரகாரம், வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பையும்கொண்ட கலப்புப் பொறிமுறையிலான போர்க்குற்ற நீதி விசாரணையை, ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் திட்டவட்டமாக நிராகரித்து நிற்கின்றனர்.

ஆனால் அதேநேரத்தில் போர்க்குற்ற விசாரணைக்காக அரசாங்கத்தினால் கோரப்படும் இரண்டு வருட கால அவகாசத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பெயரில், அதன்தலைவர் சம்பந்தனும் பேச்சாளர் சுமந்திரனும் ஆதரித்து நிற்கின்றமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய 3 கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் எதிரானது.

அது மட்டுமன்றி, போர்க்குற்ற விசாரணைக்கு கோரப்படும் இரண்டு வருட கால அவகாசத்தை ஆட்சேபித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்துக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்திருக்கும் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11பேரின் அரசியல் விவேகத்தை கேலிசெய்யும்விதத்திலும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனால் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தைக் கூட்டிமுடிவு எதுவும் எடுக்காமல், கூட்டமைப்பின் பெயரில் மிக பாரதூரமான ஒரு நிலைப்பாடு முன்வைக்கப்பட்டிருப்பது, கூட்டமைப்பின் எதிர்காலத்தையே கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

அத்துடன், பாதிக்கப்பட்ட நிலையில் நீதிகோரி நிற்கும் வழக்காளி ஒருவர், குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எதிரிக்கு ஆதரவாகப் பேசுவதைப் போல, போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இலங்கை அரசுக்கு ஆதரவாகமறைமுகமானமுறையில் வாதங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதும், அதேநேரத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் எதிர்மறையான ஓர் அரசியல் கருத்துருவாக்கத்தை தமிழ் மக்கள்மத்தியில்கொண்டு வரும் தோறணையில் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இப்பொழுது என்னதான் நடந்து கொண்டு இருக்கின்றது என்ற கேள்விக்குவழிசமைத்திருக்கின்றது.

யுத்தத்தின் கோர வடுக்களைச் சுமந்து நிற்கும் நிலையில் துவண்டு போய்விடாமல், அரசியல் நீதியை தொடர்ந்து கோரி நிற்கும் தமிழ் மக்களின் சார்பில்செயற்பட்டுவந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் பேரத்திற்கும், சந்தர்ப்பவாத, திரைமறைவு உடன்பாடுகளுக்கும் பலியாகத் தொடங்கியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஒற்றுமையின்பெயரில், பல்வேறுகருத்துவேறுபாடுகளுக்கு நடுவிலும் எமது கட்சி பெரும்பாலும்மௌனம்காத்துவந்திருக்கின்றது.

தவிர்க்கப்பட முடியாத ஒரு சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் தான்எமதுஎதிர்க்கருத்துக்களை நாம் வெளியிட்டிருக்கிறோம். அந்த வகையில் மூன்று வாரங்களுக்கு முன்னர் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாடுதிட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் கருத்துக்களைப் புறக்கணித்து, தன்னிச்சையாகவும் சர்வதிகாரத் தோறணையிலும் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பின் பெயரில் தொடர்ந்து செயற்படப் போகின்றது என்றால், அதனைக்கூட்டமைப்பின் எதிர்கால நலன் கருதி, ஓர் அரசியல் சவாலாக எமது கட்சி ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

கூட்டமைப்பு என்பது அதில் அங்கம் வகிக்கும் எந்தவொரு கட்சியினதும் தனிச்சொத்து அல்ல. தமிழ் மக்கள் அளித்த ஆணைக்கு அமைவாக எந்தவொரு கட்சியோ அல்லது அரசியல் பிரமுகரோ கூட்டமைப்பின் கொடியின் கீழ் செயற்பட முடியவில்லை என்றால், அவர்களுக்கான உரிய வழிக்காக கூட்டமைப்பின் கதவுகள் திறந்தே வைக்கப்பட்டுள்ளன என்பதனை அழுத்தம் திருத்தமாக எமது கட்சி சொல்லி வைக்க விரும்புகின்றது.

கூட்டமைப்பின்பெயரை உபயோகித்து தமிழரசுக் கட்சிக்குள் இருந்து முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசிய விரோத நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சியின் தலைவராகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, இனிமேலும் அனுமதித்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதையும் எமது கட்சி தெரிவித்துக் கொள்கின்றது. – என்றுள்ளது.

# மக்கள் போராட்டம் தொடர்வது சாதகமாக அமையாது அரசுக்கு!

## சாந்தி சிறிஸ்கந்தராஜா எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மார்ச் 08

பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வை வழங்காது போராட்டங்களைத் தொடர்ந்தும் நடத்த விடுவது அரசுக்குச் சாதகமான நிலையாகக் கருதமுடியாது.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் காணிகளை விடுவிக்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்தித்துக் கலந்துரையாடி, போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்ற அமர்வின் போது மத்திய அரசுக்கு இந்த மக்களின் போராட்டங்கள் தொடர்பான கோரிக்கைகளை நான் முன்வைக்கவுள்ளேன்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஆயுதப் போராட்டம் நிறைவு பெற்று எட்டு வருடங்கள் நிறைவடைகின்றன.

இந்த அரசு மக்களது பூர்வீக காணிகளை விடுவிக்காமல், இராணுவ முகாம்களை கடற்படை முகாம்களாக, விமானப்படை முகாம்களாக, தொடர்ந்து பராமரித்து வருகின்றது. இது கண்டிக்க வேண்டிய விடயமாகும்.

இந்த மக்கள் தமது பூர்வீக காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்தும் அதற்கு ஒரு சரியான தீர்வு வழங்கப்படவில்லை.

அதன் காரணமாகவே இன்று தெருவோரங்களில் மக்கள் தங்களுடைய காணிகளை விடுவிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என அந்த மக்கள் ஒரு மாத காலமாக போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் அந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி அந்த மண் தெருவோரங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் என்று அனைவரும் ஒன்றிணைந்து தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் தெருவோரங்களில் தங்களது காணிகளுக்கான ஆவணங்களை வைத்துக்கொண்டு தொடர்ந்தும் தெருவிலேயே போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களுக்கு தீர்வெடுக்காமை அரசுக்கு ஒரு சாதகமான நிலையாகக் கருத முடியாது.

எனவே,இந்த அரசு மக்களது காணிகளை விடுவித்து தேசிய பாதுகாப்புக்கு ஏற்றவகையில் மாற்றுஇடங்களைத்தெரிவுசெய்து அவற்றில் தமது இராணுவ முகாம்களைஅமைத்துக்கொள்ள வேண்டும்.அத்துடன், இந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்.- என்றார்.(ஐ)

# ரஷ்ய புற்றுநோய் மருந்து தரம்: பிரச்சினை எதுவும் எழவில்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 08

புற்றுநோய் சிகிச்சைக்காக ரஷ்யாவில் இருந்து தருவிக்கப்படும் மருந்துகளின் தரம் தொடர்பில் எதுவித பிரச்சினையும் இல்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்து மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பயன்படுத்தப்படுவதில்லை என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சாட்டியது.

இந்தக் குற்றச்சாட்டை முற்றிலும் நிராகரிப்பதாக அபேஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் வில்பிரட் குமாரசிறி தெரிவித்தார். கடந்த 9 மாத காலப் பகுதியில் அதிக நோயாளிகளுக்கு ரஷ்ய புற்றுநோய் மருந்தைத்தான் பயன் படுத்தியிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, தொற்றுநோய்களுடன் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் பற்றிய சகல தகவல்களையும் சுகாதார அமைச்சுக்கு வழங்குமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிகாரிகளைப் பணித்துள்ளார் என்று நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தனியார் மருத்துவமனை ஒழுங்குபடுத்தல் அமைப்பின் ஊடாக சகல தனியார் மருத்துவமனைகளுக்கும் அறிவித்தல் விடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நடைமுறையின் மூலம் புதிய நுண்ணுயிர்களைக் கண்டறிந்து, மூறையான சிகிச்சைகளைத் தொடங்கி, நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.-என்றார்.(ஐ)

# மகளிர் தின நிகழ்வுகள்

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு ஏற்பாடு செய்த பெண்கள் விழிப்புணர்வுப் போராட்டமும், பொதுக் கூட்டமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புத்தூர் சந்திப் பகுதியில் இடம்பெறவுள்ளன.

★★★

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்னாட்டு மகளிர்தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகத் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் கலந்து கொள்வார்.

★★★

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் முறைசாரா தொழில்துறையில் ஈடுபடும் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றங்கள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை வெளிக்கொண்டு வரும் நோக்கில் அனுபவப் பகிர்வு நிகழ்வு ஒன்று இன்று புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது.

★★★

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன்தலைமையில்இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்துறைப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கலந்துகொள்வார். (ஐ)




நியூஸிலாந்து வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் தொலைத்தொடர்பு , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. கொழும்பு தாஜ்சமுத்திரா விடுதியில் நேற்று இடம்பெற்ற இந்தப் சந்திப்பின் போது இலங்கையின் சார்பில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, நியூஸிலாந்தை பிரதிநிதித்துவப்படுத்தி அந்நாட்டின் தூதுவரும் வர்த்தக அமைச்சருமான டேவிட் பெனட் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# யாழ்.இந்துவில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த. (உ/த) 2019 மாணவர்களுக்குப் புதிய பிரிவுகள் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலுக்கு பெற்றோருடன் மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ஐ.தயானந்தராஜா கேட்டுள்ளார். (ஐ)

# பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூணவேண்டும்

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி அவர்களின் வாழ்க்கையை சுபீட்சமாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப் படுத்துவதற்கு நாம் இன்றைய தினத்தில் திடசங்கற்பம் பூணவேண்டும்.

-இவ்வாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத்துள்ள சர்வதேச மகளிர் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சர்வதேசமகளிர்தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது நாட்டைப் பொறுத்தவரையில் 50 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாக இருக்கின்றனர். இன்றைய சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "முக்காலத்தையும் அறிந்தவள் பலத்தால் வெற்றிகொள்பவள்" எனும் தொனிப் பொருளில் தேசிய மகளிர் தின நிகழ்வு மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நாடுதழுவிய ரீதியிலிருந்து பெண்கள் பங்கேற்கவுள்ளனர்.

யுத்தத்தால் வடக்கு, கிழக்கில் பெண்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர். யுத்தத்தால் 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையானோர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின்

மகளிர்தின செய்தியில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு



வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்லாட்சி அரசு படிப்படியாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஆனாலும், இந்த நடவடிக்கைகள் இன்னமும் போதுமானவையாக இல்லை. பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் நாடாளுமன்ற பெண்கள் அமைப்பின் அனுசரணையுடன் கிளிநொச்சியில் உதவி வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில்பல பெண் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். பாதிக்கப்பட்ட 500 பெண்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறவேண்டும்.-என்றார். (ஐ)

## சிறையிருக்கும் விமல் வீரவன்ஸவுக்கு நாடாளுமன்றில் நேற்றுப் பிறந்தநாள்






சிறையிலிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றுக்கு வந்த சமயம் 47 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். கைவிலங்குப் படம் போடப்பட்ட கேக்கை வெட்டினார். நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், கூட்டுஎதிரணிஉறுப்பினர்களும்கலந்துகொண்டனர்.

## இராணுவம் கொண்டு சென்ற பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கும்பிட்டுக் கேட்கிறோம்!

### சர்வதேசத்திடம் வவுனியா தாய் ஒருத்தி மன்றாட்டம்




"சர்வதேசத்திடம் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறோம். இராணுவம் கொண்டு சென்ற எனது பிள்ளையை மீட்டுத் தாருங்கள்" - என வவுனியாவைச் சேர்ந்த கோபாலசிங்கம் சிவமதி என்கின்ற தாய் உருக்கமாக வேண்டியுள்ளார்.

வவுனியாவில் போராட்டத்தை மேற்கொண்டு வரும் - கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப் பட்டோரின்–உறவுகள் வெய்யில், மழை என்பவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று 12ஆவது நாளாகவும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே தாய் ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

சமுர்த்தியால் பயிற்றுவிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக எனது மகன் பஸ்ஸிற்குக் காத்திருந்த வேளை, அவ் வீதியால் ரோந்து வந்த இராணுவத்தினர் எனது மகனை கொண்டு சென்றார்கள். நான் பொலிஸ், மனித உரிமைகள் அமைப்பு என எல்லோரிடமும் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்தப் பதிலும் இல்லை.

நல்லாட்சி அரசாங்கம் மற்றும் இந்த சர்வதேசத்திடமும் எமது பிள்ளைகளை மீட்டுத் தர வேண்டும் எனக் கேட்கின்றோம். நாங்கள் இன்று 12 நாள்களாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எமக்கு எந்த விதப் பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. எங்கள்பிள்ளைகளுக்கு ஒரு பதிலைத் தாருங்கள் எனக் கையெடுத்து கும்பிட்டுக் கேட்கிறோம் – என அந்தத் தாய் மேலும் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன என கேள்வி எழுப்பி நேற்று எட்டாவது நாளாக ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்புவதற்கான கடிதங்கள் திரட்டப்பட்டன. (உ--100)

## வடக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு மாகாண திணைக்களங்களில் வேலைவாய்ப்பு

### அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தகவல்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்குமாகாணத்தில்உள்ள பட்டதாரிகளுக்கு மாகாண அமைச்சுக்கள்மற்றும்திணைக்களங்களில் வேலைவாய்ப்புக்களை வழங்க மாகாண சபை நடவடிக்கை எடுக்கும் என வடக்குமாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் குடி தண்ணீர் பிரச்சினைகள் மற்றும் நீர் வழங் கல் தொடர்பில் ஆராயும் சிறப்பு அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில்அவைத்தலைவர் சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன் போது கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்கருத்துத்தெரிவிக்கையில் -


வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் தங்களுக்கு நியமனம் வழங்குமாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர். அதன் போது வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மாகாண நிர்வாகத்திற்குட்பட்டு எந்தெந்தத் துறைகளிலே பட்டதாரிகளை நியமிக்க முடியுமோ அந்த விவரங்களைக் கோரி அவற்றை நிரப்புவதற்காகத் துரித நடவடிக்கையை நாங்கள் எடுப்போம் என்று கூறியிருக்கின்றேன்.

அதற்கமைய இந்த விவரங்களை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குத் தெரிவித்து அதன் பின்னர் பட்டதாரிகளுக்கு வழங்கக்கூடிய நியமனங்களை வழங்குவதற்காக இச் சபை நடவடிக்கைகளை எடுக்கும் என சபை சார்பாக அவர்களுக்குத் தெரிவித்தேன்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சுக்கள்மற்றும்திணைக்களங்களுக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. அதற்கமைய பட்டதாரிகளை உள்வாங்க நடவடிக்கை எடுக்க அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார். (ம)

## புதிய அரசமைப்பில் பாலின சமத்துவம்!

### மகளிர் தினச் செய்தியில் சம்பந்தன் வற்புறுத்து



பாலின சமத்துவம், சமநீதி ஆகியவற்றை உறுதிசெய்வதோடு இலங்கையில்வாழும் அனைத்துப் பெண்களினதும் சுய கௌரவத்தையும் பாதுகாக்கும் வகையில்புதிய அரசமைப்பு அமைய வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பை இன்றைய மகளிர் தினத்தை ஒட்டித் தாம் விடுத்த செய்தியில் எதிர்க்கட்சித் தலைவரும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் வெளியிட்டுள்ளார். அந்தச் செய்தியின் விவரம் வருமாறு:-

எமது நாட்டிற்கு பெண்களின் பங்களிப்பானது விலை மதிக்க முடியாததொன்றாகும். எனினும், துரதிஷ்டவசமாக எமது சமூகத்தின் ஒவ்வொரு மூலையிலும் பெண்கள் ஒடுக்கப்படுதலுக்கும், துன்புறுத்தலுக்கும் கொடுமைகளுக்கும் முகங்கொடுக்கிறார்கள். மேலும் இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தில் அதிகம் பாதிப்பிற்குள்ளானவர்களாக பெண்கள் காணப்படுகின்றார்கள். யுத்தமானது அவர்களின் அன்புக்குரியவர்களின் உயிர்களைக் காவு கொண்டதுடன், அநேகரை விதவைகளாக்கியதுடன் அவர்களது வாழ்வாதாரங்களையும் இல்லாமற்செய்தது. இதற்கும் மேலாக இன்று வரை ஆயிரக்கணக்கான பெண்கள் யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் காணாமற்போன தமது அன்புக்குரியவர்களைத் தேடிவருகிறார்கள்.

மேலும் பெண்களை வலுவற்றவர்களாகவும், துஷ்பிரயோகத்திற்கும், அவர்கள் பல்வேறு சுரண்டல்களுக்கு உள்ளாவதற்கும் அவர்கள் தாங்கள் வாழ்க்கையை முன்னெடுத்து செல்வதற்குப் பாதிப்பாகவும் உள்ளவிடயம் தொடர்பில் அவசரமான கவனமும் நடவடிக்கைகளும் தேவையாகவுள்ளன.

பெண்களின் வகிபாகத்தையும் அவர்கள் எமது நாட்டிற்கு வழங்கியுள்ள பங்களிப்பையும் கொண்டாடும் இவ்வேளை, மக்களாகிய நாம் அனைவரும் பாலின சமத்துவத்தையும், சமநீதியையும், உறுதிசெய்வதோடு இலங்கையில் வாழும் அனைத்து பெண்களின் சுயகௌரவத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும் என்பது எனது எதிர்ப்பார்ப்பாகும். அதைப் போலவே, புதிய அரசமைப்பானது, இந்த அபிலாஷைகளை உள்ளடக்குவதோடு, சமுதாயத்தின் எல்லாக்கோணங்களிலும் பெண்களுக்கு அதிகளவு பாதுகாப்பையும் வலுவூட்டலையும் உறுதி செய்யவும் வேண்டும் என்பதும் எனது எதிர்பார்ப்பாகும்.

எமது நாட்டின் வரலாற்றின் முக்கியமான ஒரு காலகட்டத்தில் நாம் பிரவேசித்துள்ள இந்தத் தருணத்தில், நிலைமாற்று நீதி செயன் முறைகளில் பெண்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு, இந்த செயன் முறைகளில் பெண்களின் முழுமையான பங்களிப்பை உறுதி செய்யுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றேன். இறுதியாக, செழிப்பும் முன்னேற்றமுமான நாட்டினை நோக்கி பெண்கள்வழங்கிய அதீத பங்களிப்புகளை வரவேற்பதோடு, எமதுநாட்டின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் தொடர்ந்தும் அயராது பங் காற்றவேண்டும் என அனைத்துப் பெண்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் – என்று உள்ளது.

## நல்லாட்சி அரசு நாசகார அரசாக மாறக்கூடாது

## காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதை அரசு வெளிப்படுத்தவேண்டும்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

வவுனியா, மார்ச்.08

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா - என்பதை நல்லாட்சி அரசு வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் ஏதாவது குற்றம் செய்திருந்தால் நீதிமன்றங்கள் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களை விடுதலை செய்யுங்கள். அதைவிடுத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தை புறக்கணிக்காதீர்கள்"

–இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன்.

காணமற்போனோரின் உறவினர்கள் வவுனியாவில் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு தமது ஆதரவை வெளியிட்டுள்ள மேற்படி அமைப்பு நேற்று அங்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியது. அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அன்ரனி யேசுதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் --

தமிழ் மக்கள் நல்லாட்சி அரசாங்கத்திற்கு நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே வாக்களித்தனர். காணாமற்போனோரின் உறவுகள், இந்த அரசாங்கத்தின் மூலமாவது தங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே வாக்களித்தனர்.

ஆனால் நல்லாட்சி அரசாங்கம் இன்று நாசகரமான அரசாக மாறிக்கொண்டிருக்கின்றது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுவழங்காமல் இருக்கின்றது. எனவே, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும்.

மேலும், வடக்கில் இராணுவமயமாக்கப்பட்டிருக்கின்ற காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படவேண்டும். – என்றார். (ம-100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6713 கே.கே.எஸ். வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது